இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்
PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 148 | இதழ் : 12 | திகதி : 08.09.2024 | விலை : 50.00

# பூமியின் அழுகுரலுக்கு செவிகொடுங்கள்
## - திருத்தந்தை பிரான்சிஸ்



இயற்கைப் பேரிடர் மற்றும் காலநிலை நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் அழுகுரலுக்கும், இப்பூமியின் அழுகுரலுக்கும் நாம் அனைவரும் செவிமடுக்க இறை வேண்டல் செய்வோமெனத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தனது செப்ரெம்பர் மாதச் செபக் கருத்தில் அழைப்பு விடுத்துள்ளார். பூமியின் வெப்ப நிலையை நாம் கணக்கெடுத்தால் அதற்குக் காய்ச்சல் இருப்பதை நாம் அறிய முடிவதுடன் நாம் நோயுறுவது போல் அதுவும் நோயுற்று நேயாளியாக இருப்பதை உணர முடியுமெனவும் தனது செபக்கருத்தில் சுட்டிக்காட்டியுள்ள திருத்தந்தை அவர்கள் பூமியின் இவ்வேதனைக் குரலுக்கு நாம் செவிமடுக்கிறோமா? என்ற கேள்வியையும் முன்வைத்துள்ளார். இயற்கை மற்றும் போர் பேரிடர்களால் அதிக அளவில் துன்புறும் ஏழை மக்களே வெள்ளப்பெருக்காலும், வெப்பக் காற்று அலைகளாலும் வறட்சியாலும் தங்கள் குடியிருப்புக்களைவிட்டுக் குடிபெயரவேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்படுவதைச் சுட்டிக்காட்டியுள்ள திருத்தந்தை அவர்கள் இயற்கைப் பேரழிவுகளால் பாதிக்கப்பட்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களின் குரலுக்கு நம் செவிகள் திறக்கின்றனவா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளார்.

தட்பவெப்ப நிலை மாற்றம், மாசுக்கேடு, போன்ற அழிவுகளை உள்ளடக்கிய சுற்றுச்சூழல் நெருக்கடி நம் பதிலை எதிர்பார்க்கின்றன எனவும் கூறிய திருத்தந்தை நாம் ஒவ்வொருவரும் நம் தனிப்பட்ட மற்றும் சமூகப் பழக்கவழக்கங்களை மாற்றியமைத்து, ஏழ்மைக்கு எதிராகப் போராடவும், இயற்கையைப் பாதுகாக்கவும், அர்ப்பணிக்க வேண்டுமென தன் செய்தியில் அழைப்புவிடுத்துள்ளார்.

செப்டம்பர் மாதம்முதலாம் திகதி, கத்தோலிக்க திருஅவையில் படைப்பு மீது அக்கறைக்கான செபநாளாக சிறப்பிக்கப்படுவதுடன் திருத்தந்தையின் இம்மாத செபக்கருத்து சுற்றுச்சூழலை மையம் கொண்டதாக இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் வருடாந்த பரிசளிப்புவிழா



யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் முன்னெடுக்கப்பட்ட வருடாந்த பரிசளிப்புவிழா கடந்த 30 ஆம் திகதி கல்லூரி மத்தியூஸ் மண்டபத்தில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் அருட்தந்தை திருமகன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கல்லூரி முகாமையாளர், யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 2023ஆம் கல்வி ஆண்டில் கல்வி மற்றும் இணைப் பாடவிதான செயற்பாடுகளில் சிறந்த முறையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கி வைக்கப் பட்டன.

MSF நிறுவனத்தின் தென் ஆசிய பிராந்தியத் தலைவர் திரு. தவரட்ணம் மதிமாறன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் இலங்கை துடுப்பாட்டத் தரவு ஆய்வாளர் திரு. விஜயசிங்கம் விதுபாலா அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## 45வது வெளிநாட்டுத் திருப்பயணத்தைத் தொடங்கினார் திருத்தந்தை





செப்டம்பர் மாதம் 2ஆம் திகதி வத்திக்கானிலிருந்துஆசியா மற்றும் ஓசியானியாவின் 4 நாடுகளுக்கான பயணத்தைத் துவக்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஏறக்குறைய 13 மணி நேரவிமானப் பயணத்திற்குப்பின் இந்தோனேசியா சென்றடைந்தார்.

இந்தோனேசியாவில் திருத்தந்தை பிரான்சிஸ் இந்தோனேசியா, பாப்புவா நியு கினியா, கிழக்குத் திமோர், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு என 11 நாட்கள் திருப்பயணத்தை யொட்டி முதல் நாடாக இந்தோனாசியாவில் உள்ளூர் நேரம் காலை 11 மணி 19 நிமிடங்களுக்கு தலைநகர் ஜகார்த்தாவில் வந்திறங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை, முதலில் இந்தோனேசியாவிற்கான திருப்பீடத் தூதுவர் பேராயர் பியெரோ பியொப்போ அவர்கள் விமானத்திற்குள் வந்து சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

விமானத்திலிருந்து கீழேவந்த திருத்தந்தையைமத விவகாரங்களுக்கான இந்தோனேசிய அமைச்சர் முதலில் வரவேற்க, பாரம்பரிய உடையணிந்த இரு குழந்தைகள் திருத்தந்தையை வரவேற்கும் விதமாகப் பூங்கொத்துக்களை வழங்கினர்.

விமான நிலையத்தில் இதுதவிர வேறு எந்த வரவேற்பு நிகழ்ச்சிகளும், உரையும் இடம்பெறவில்லை.

ப.7

## யாழ். ஆயருடன் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச சந்திப்பு



இலங்கைப் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் ஜனாதிபதித் தேர்தலின் பொது வேட்பாளருமான சஜித் பிரேமதாச அவர்கள் யாழ். மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த நிலையில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். யாழ் மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் 31ஆம் திகதி நடைபெற்ற இச்சந்திப்பில் இலங்கை யின் அனைத்து மாகாணங்களிலும் சமமான அபிவிருத்தி மேற்கொள்ளல், சமயங்கள் ஊடாக ஒற்றுமையை வலுப்படுத்தல், இளைஞர்களுக்கான கல்வி மற்றும் விளையாட்டுத்துறையை வினைத்திறன் மிக்கதாக மாற்றுதல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இச்சந்திப்பில் இலங்கை முன்னாள் கிரிக்கெட் அணித்தலைவர் அர்ஜீனா ரணதுங்க மற்றும் காவிந்த மாகளந்த ஆகியோர் கலந்து கொண்ட னர்.

## கனடா தமிழ் ஆன்மீகப் பணியகத்தின் ஒழுங்குபடுத்தலில் "மறைகாத்த மாவீரன்" தென்மோடி நாட்டுக்கூத்து




கனடா மிசிசாகா புனித பற்றிமா அன்னை தமிழ் ஆன்மீகப் பணியகத்தின் ஒழுங்குபடுத்தலில் புனித யோசப் வாஸ் வாழ்க்கை வரலாற்றை வெளிக்கொணரும் "மறைகாத்த மாவீரன்" தென்மோடி நாட்டுக்கூத்து ஆகஸ்ட் மாதம் 24ம் திகதி, 2024 அன்று அரங்கேற்றப்பட்டது. அமரர் அண்ணாவியார் பாலதாஸ் அவர்கள் எழுதிப் பல தடவைகள் யாழ் மறைமாவட்டத்தில் அரங்கேற்றம் செய்யப்பட்ட இந் நாட்டுக்கூத்து முதல் தடவையாகக் கனடா நாட்டில் மேடையேற்றப்பட்டுள்ளது. இதை அருட்தந்தை பாலதாஸ் பிறாயன் அவர்களின் அனுமதியுடன், புனித பற்றிமா அன்னை தமிழ் ஆன்மீகப் பணியக இயக்குநர் அருட்தந்தை கனிசியஸ் றாஜ் கைமர் பீலிக்ஸ் அவர்களின் வழிநடத்துதலில், கனடா திருமறைக் கலாமன்ற கலைஞர்களின் தன்னார்வப் பங்களிப்புடன், திரு அன்ரனி குயின் கொன்சன்ரைன் (றாஜன்), மற்றும் திரு. செபஸ்ரியன் மைக்கல் றாஜ் (அசோக்) ஆகியோரின் நெறிப்படுத்தலில், இந் நாட்டுக்கூத்து அரங்கேற்றப்பட்டுள்ளது.

அன்றைய நாள் நிகழ்வை கனடா ரொரன்ரோ உயர் மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய பேரருட்திரு. பிரான்சிஸ் லீயோ அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்துள்ளார். அவரோடு அருட்கலாநிதி யோசப் சந்திர காந்தன், பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி, மற்றும் பத்துக்கும் அதிகமான அருட்தந்தையர்கள், அன்பளிப்பாளர்கள், ஆன்மீகப் பணியக இறைமக்ள், நலன்விரும்பிகள் எனப் பலரும் இதில் கலந்து சிறப்பித்தார்கள். புலம் பெயர்ந்து கனடாவில் வாழ்ந்து வரும் மக்களுக்கு இன்னும் குறிப்பாக ரொரன்ரோ உயர்மறைமாவட்டத்தின்

ப.7

## இறை அடியார் பி. ஏ. தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்டத்திற்காக செபியுங்கள்.
–யாழ். குருமுதல்வர்





இறை அடியார் பி. ஏ. தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்டத்திற்காக செபியுங்கள். யாழ் குரு முதல்வர் வேண்டுகோள். கனடாவில் உள்ள லண்டன் ஒன்றாரியோ மறை மாவட்டத்தில் அமைந்துள்ள செபமாலைத்தாசர் சபையினருடைய புனித செபமாலை அன்னை திருத்தலத் திருநாள் கடந்த ஆகஸ்ட் 31 ஆம் திகதி சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

ப.7

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

## எமது எண்ணம்

### பொருத்தமான வேட்பாளரும் ஈழத் தமிழர்களின் சிந்தனையும்

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகி வரும் நிலையில் அரசியல் களம் சூடு பிடித்துள்ளது.

சுயாதீனமாகவும்பலகட்சிகளைப்பிரதிநிதித்துவப் படுத்தியும் வேட்பாளர்கள் பலர் இதில் போட்டியிடவுள்ளனர். வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திப் பொது வேட்பாளர் ஒருவர் களம் இறக்கப்பட்டுள்ளார்.

தேர்தல் பிரச்சாரங்கள், மேடைகள் உறுதிகள், சத்தியங்கள், ஒப்பந்தங்கள் என பல வகையான கேலிக் கூத்துக்கள் அரங்கேறி வருகின்றன.

75 வருட சுதந்திரத்தை இன்னும் மக்கள் முற்று முழுவதுமாகப் பெற்றுவிடவில்லை.

ஊழல் மோசடி மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகம் ஆகியவற்றுக்கு அடிமைகளாகி எங்கள் முழு சுதந்திரத்தையும் பறி கொடுத்துக்கொன்றிருக்கின்றோம்.

இனவாதத்தைத் தூண்டித் திசை திருப்பும் அரசி யலுக்கு முற்றுப்புள்ளி வைப்பது மக்கள் ஒவ்வொருவரினதும் ஜனநாயகக் கடமை

சுமார் இரு வருடங்களுக்கு முன் மக்கள் ஒன்றிணைந்து இலங்கைத்தீவைக் கட்டியெழுப்ப போராடியிருந்தனர்.

இம்முறை அவ்வாறான ஒரு சம்பவத்திற்கு வழி வகுக்காமல் வெள்ளம் வருமுன் அணை கட்டுவோம் என்ற எண்ணத்துடன் பெறுமதியான வாக்குகளை வழங்க மக்கள் வழங்க முன்வர வேண்டும்.

வெறும் பேச்சுக்களுக்கும், போலி வாக்குறுதிகளுக்கும் மக்களின் வாழ்வியலில் மாற்றங்களை ஏற்படுத்தாது.

அன்று போர்க் காலத்திலும் அதன் பின்னரான காலத்திலும் குறிப்பாக 2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியின்போது ஏற்பட்டிருந்த அவலங்களை மக்கள் மறந்துவிட மாட்டார்கள்....

வரிசை யுகம் குறிப்பாக எரிவாயு வரிசை, பொருள் விலையேற்றம், உணவின்மை, ஏழ்மை, ஏக்கத்தில் பறி போன உயிர்கள், எரிவாயுக் கப்பல் வருகை போன்றவை நாளிதழ்களில் பிரதான தலைப்புச் செய்தியாக மாறியது, ஈஸ்டர் தாக்குதல், இனவாதம் என்று அப்படி அனைத்தையும் தாங்கி பொறுமையின் உச்சக் கட்டத்தை அடைந்தவர்களாய் ஊழலால் பெருத்துப்போன ஒரு ஆட்சியாளனை தப்பியோடச் செய்தவர்கள் மக்கள்

ஆகவே, இனியும் மக்களால் முடியும், மக்கள் வாக்குகளை தகுதியான வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும்.

நாம் வழங்கப் போகும் ஒவ்வொரு வாக்குக்கும் நாங்களே தான் பொறுப்புக் கூற வேண்டும்.

அடுத்த ஐந்து ஆண்டுகள் இலங்கைத்தீவின் தலையெழுத்தைத் தீர்மானிப்பது மக்களின் வாக்குகள்தான்

ஒரு நிமிடத்திற்குள் நீங்கள் வழங்கும் உங் கள் வாக்குகள் நீடித்த விளைவுகளை ஏற்படுத்தும்.

எனவே, நீங்கள் வாக்களிப்பதற்கு முன் உங்களிடமே கேள்வியெழுப்பிக் கொள்ளுங்கள்.

மக்கள் வழங்கும் அந்த ஒரு வாக்கு எவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அறிந்து செயல்படுவோம்.

வாக்களிக்காமல் இருப்பதாலும் எதுவித பயனும் கிடைக்கப் போவதில்லை.

ஆக, எதிர்வரும் 21ஆம் திகதி இலங்கைத்தீவில் மிக முக்கியமான தேர்தல் இடம்பெறவுள்ளது. வாக்குரிமையைச் சரியாகப் பயன்படுத்தி ஒரு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க மக்கள் ஒன்றினைய வேண்டும். இது ஜனநாயகக் கடமை.

இந்த அடிப்படையில் தமிழ் பொது வேட்பாளர் முன்வைத்த கோரிக்கைகள் ஜனநாயக வழியில் ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலைக்குப் பொருத்தமானது.

ஆகவே சிந்தித்து வாக்களிப்பதன் மூலம் ஈழத் தமிழர்களின் கூட்டிரிமை பற்றிய பேச்சு சர்வதேச அரங்கில் நிலைபெறும்

**அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்**

## திருத்தந்தையின் ஆசியா, ஓசியானியா திருப்பயணம் - ஒரு முன்தூது

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இந்த 45ஆவது திருப்பயணம்தான் 32 ஆயிரத்து 814 கிலோமீற்றர் அதிக தூரத்தைக் கொண்டுள்ளதாக உள்ளது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்தோனேசியா, பாப்புவா நியூகினியா, கிழக்குத் தீமோர் மற்றும் சிங்கப்பூர் நாடுகளுக்கான தன் திருத்தூதுப் பயணத்தைத் தொடக்கவுள்ளார். திருத்தந்தையின் இத் திருத்தூதுப் பயணம் பல விடயங்களில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக உள்ளது. இதுவரை திருத்தந்தை மேற்கொண்ட திருப்பயணங்களுள் அதிகப்படியான நாட்களைக் கொண்ட திருப்பயணம் 2015ஆம் ஆண்டு செப்ரெம்பரில் கியூபா, அமெரிக்க ஐக்கியநாடு மற்றும் ஐ.நா. நிறுவனத்திற்கு மேற்கொண்ட திருப்பயணமாகும். அதிலும் இது அமெரிக்க ஐக்கிய நாட்டில் இடம்பெற்ற குடும்பம் குறித்த 8வது பன்னாட்டுகருத்தரங்கில்பங்குபெறச்சென்றதிருப்பயணமாகும். இந்தத் திருப்பயணத்தில்தான் அதிகபட்சமாக 8 நாட்கள் 23 மணி 45 நிமிடங்களை செலவிட்டுள்ளார். ஆனால், தற்போது திருத்தந்தை மேற்கொள்ளும் திருப்பயணமோ 11 நாட்கள் 1 மணி 10 நிமிடங்களைக் கொண்ட நீண்ட பயணமாகவுள்ளது. இதுபோல் இந்த 45ஆவது திருப்பயணம்தான் 32 ஆயிரத்து 814 கிலோமீற்றர் என்ற வகையில் இதுவரை உள்ள திருப்பயணங்களில் அதிக தூரத்தைக் கொண்டுள்ளதாகவுள்ளது. இதற்கு முன்னர் 2018ஆம் ஆண்டு ஜனவரியில் சிலே மற்றும் பெரு நாடுகளுக்கு திருத்தந்தை அவர்கள் மேற்கொண்ட திருப்பயணம் 30 ஆயிரத்து 334 கிலோ மீற்றரை உள்ளடக்கியதாக இருந்தது.

திருப்பயண நாட்களையும், பயணம் செய்யும் தூரத்தையும் பொறுத்தவரையில் இதுவே மிகப்பெரும் பயணமாகும். அண்மை நாட்களில் உடல் நலம் குன்றிக் காணப்படும் திருத்தந்தை, டிசம்பர் மாதத்தில் 88 வயதை எட்டவுள்ள திருத்தந்தை இந்த நீண்ட திருத்தூதுப் பயணத்தை நிறைவு செய்யவுள்ளாரெனில் எவ்வளவு மனவுறுதியுடையவராக இருப்பார் என்பதும் புரிகிறது.

திருத்தந்தையின் திருப்பயணங்கள் குறித்து நாம் எடுத்துக்கொண்டோமானால் திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் அவர்கள் 1986ஆம் ஆண்டு நவம்பர் 18 முதல் டிசம்பர் முதல் திகதி வரை 13 நாட்கள் 6 மணி 15 நிடங்கள் பங்களாதேஷ், சிங்கப்பூர், பிஜிதீவு, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, செய்செலஸ் தீவு ஆகியவைகளில் 48 ஆயிரத்து 974 கிலோமீற்றர் பயணம் மேற்கொண்டதே மிகப்பெரிய திருப்பயணமாக நோக்கப்படுகிறது. இப்பயணத்தைத் திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் அவர்கள் மேற்கொண்டபோது அவருக்கு வயது 66 தான். 1920ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி பிறந்த அத்திருத்தந்தை 1986ல் மிக நீண்ட திருப்பயணத்தை மேற்கொண்டபோது 66 வயதினராக இருந்தார். ஆனால் 1936ஆம் ஆண்டு டிசம்பர் 17ல் பிறந்த தற்போதைய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 32 ஆயிரத்து 814 கிலோமீற்றர் தூரப் பயணத்தை 11 நாட்களில் மேற்கொள்ளும்போது அவரின் வயது 87 என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களும் 2008ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பன்னாட்டு இளையோர் தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு ஆஸ்திரேலியாவுக்கு 32,836 கிலோமீற்றர் பயணத்தை மேற்கொண்டார். 1927 ஆம் ஆண்டு ஏப்ரல் 16ஆம் திகதி பிறந்த அவருக்கு இத்திருப்பயணம் மேற்கொள்ளும்போது 81 வயது.

**இந்தோனேசியா**

அன்பு நெஞ்சங்களே, தற்போது திருத்தந்தை பிரான் சிஸ் அவர்கள் மேற்கொள்ளும் நான்கு நாடுகளின் திருப் பயணத்தை ஒட்டி, அவர் பயணம் மேற்கொள்ளும் நாடுகள் குறித்த விபரங்களை இப்போது காண்போம். செப்ரெம்பர் 3ஆம் திகதி இந்தோனேசியாவின் தலை நகர் ஜகார்த்தாவை உள்ளூர் நேரம் நண்பகலுக்கு சிறிது முன்பாகச் சென்றடையும் திருத்தந்தை, விமான நிலைய வரவேற்புக்குப்பின் அந்நாள் முழுவதையும் திருப்பீடத் தூதரகத்திலேயே செலவிடுவார். இந்தோனேசியாவுக்கும் இத்தாலிக்கும் இடையேயான நேர வித்தியாசம் 5 மணி என்பதையும் நாம் இங்கு நினைவில் கொள்ளவேண்டும்.27 கோடியே 57 இலட்சத்து 74ஆயிரம் மக்கள் வாழும் இந்தோனேசியா அல்லது இந்தோனேசியக் குடியரசு என்பது தென்கிழக்காசியா, மற்றும் ஓசியானியாபகுதிகளில்17,508தீவுகளைக் கொண்ட நாடாகும். இதில் 6,000 தீவுகளில் மக்கள் வாழ்கிறார்கள். போர்னியோ, சுமாத்திரா, சாவகம், நியூகினி, சுலாவெசி என்பவை பெரிய தீவுகளாகும். போர்னியோ தீவில் மலேசியாவுடனும் புரூணையுடனும், நியூகினி தீவில் பப்புவா நியூகினியுடனும், தீமோர் தீவில் கிழக்குத் தீமோர் நாட்டுடனும் நில எல்லைகளை கொண்டுள்ளது. உலகில் மிக அதிகமான முஸ்லிம் மக்களைக் கொண்ட நாடு இந்தோனேசியா. பாப்புவா நியூகினி, கிழக்குத் திமோர், மலேசியா ஆகிய நாடுகள் இந்த நாட்டின் எல்லைகளில் உள்ளன. சிங்கப்பூர், பிலிப்பீன்ஸ், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளும், இந்தியாவின் அந்தமான் நிக்கோபார் தீவுகளும் இந்தோனேசியாவுக்கு அருகில் உள்ளன. இந்தோனேசியா என்ற பெயர் கிரேக்க மொழியில் இந்தியா எனப் பொருள்படும். இந்தோனேசியம் இதன் தேசிய மொழியாகும். இது மலாய் மொழியை ஒத்தது. பெரும்பாலான மக்கள் இந்தோனேசிய மொழி யுடன் உள்ளூர் மொழி ஒன்றையும் பேசுகின்றனர். அவற்றுள் சாவகம் என்ற மொழி அதிகம் பேசப்படும் மொழியாகும். இந்தோனேசியாவின் மக்களில் பெரும்பான்மையோர் இஸ்லாமிய சமயத்தை பின்பற்றினாலும் இது இஸ்லாமிய நாடு அல்ல. மதச் சுதந்திரம் இந்தோனேசிய அரசியலமைப்பில் உள்ளது. இஸ்லாம், புத்தம், இந்து, கத்தோலிக்கம், சீர்திருத்த கிறித்தவம், கன்பூசியம் ஆகிய 6 சமயங்களை மட்டுமே அதிகாரபூர்வமாக அங்கீகரித்துள்ளது அரசு. மொத்த மக்கள் தொகையில் கத்தோலிக்கர் 3.01 விழுக்காட்டினராக உள்ளனர், அதாவது 82 இலட்சத்து 97,000 கத்தோலிக்கர் இந்தோனேசியாவிலுள்ளனர். இங்கு 39 மறைமாவட்டங்களும் 1456 பங்குத் தளங்களும் உள்ளன. 50 ஆயர்கள், 5,903 அருட்பணியாளர்கள், 9,658 பெண் துறவிகள், 21,932 பொதுநிலை மறைக் கல்வி ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். இந்தோனேசியாவில் தலத் திருஅவை 5684 கல்வி நிலையங்களைக் கொண்டுள்ளது.

**பாப்புவா நியூகினி**

3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இந்தோனேசிய தலைநகர் ஜகார்த்தாவைச் சென்றடையும் திருத்தந்தை 3ஆம் திகதி முதல் 6ஆம் திகதிவரை தலைநகரிலேயே திருத்தூதுப் பயணம் மேற்கொண்ட பின்னர், அன்று மாலை உள்ளூர் நேரம் 6.50 மணியளவில் பாப்புவா நியூகினி நாட்டைச் சென்றடைவார். இந்தோனேசியாவுக்கும் பாப்புவா நியூகினிக்கும் இடையேயான நேர வித்தியாசம் 3 மணி நேரமாகும். அதாவது, உரோமுக்கும் பாப்புவா நியூகினி நாட்டிற்கும் இடையே 8 மணிநேர வித்தியாசம் உள்ளது. இதுவே இந்தியாவுக்கும் பாப்புவா நியூகினிக்கும் இடையேயான நேர இடைவெளி 4 மணி 30 நிமிடங்களாகும்.

இப்போது பாப்புவா நியூகினி குறித்து காண்போம். பாப்புவா நியூகினி என அழைக்கப்படும் இந்நாடு, 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து மெலனேசியா என அழைக்கப்படும், பசுபிக் பெருங்கடல் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. இந்நாட்டின் மிகச்சிறிய எண்ணிக்கையிலுள்ள நகரங்களிலொன்றான போர்ட் மோர்ஸ்பி இதன் தலைநகராகும். உலகிலுள்ள மிகவும் பன்முகத்தன்மையுடைய நாடுகளில் இந்நாடும் ஒன்று. மக்கள் தொகை 82 இலட்சத்து 41 ஆயிரமே உள்ள இந்நாட்டில் 850க்கும் மேற்பட்ட ஆதிக்குடி வாசிகளின் மொழிகளும், குறைந்தது அதே எண்ணிக்கையுடைய பழங்குடிக் குழுக்களும் உள்ளன. இந்நாடு அதிகமான கிராமங்களைக் கொண்டுள்ளதால், 18 விழுக்காட்டு மக்களே நகர்ப்புறத்தில் வசிக்கின்றனர்.

பெரும்பாலான மக்கள் விவசாயத்தில் ஈடுபடுகிறார்கள். இந்நாட்டு மக்கள் தொகையில் 30.6 விழுக்காட்டினர் கத்தோலிக்கர், அதாவது 25 இலட்சத்து 22 ஆயிரம் பேர். இங்கு 19 மறைமாவட்டங்களும் 462 பங்குத்தளங்களும் உண்டு. 27 ஆயர்கள், 600 அருட்பணியாளர்கள், 808 பெண் துறவிகள், 3134 பொதுநிலை மறைக்கல்வி ஆசிரியர்கள் மறைப்பணியாற்றி வருகின்றனர். தலத்திருஅவை 3559 கல்வி நிலையங்களையும் கொண்டுள்ளது.

**கிழக்குத் தீமோர்**

கிழக்குத் தீமோர் என்பது, இந்தோனேசியாவின் மேற்குத் தீமோரின் கிழக்கு பகுதியில் உள்ள நாடாகும். இது ஆஸ்திரேலியாவின் டார்வின் நகருக்கு வடமேற்குத் திசையில் 400 மைல் தொலைவில் அமைந்துள்ளது. இந்த நாடு 1975ஆம் ஆண்டே போர்த்துக்கல்லிலிருந்து சுதந்திரம் அடைந்த போதிலும், அதற்கு அடுத்த ஆண்டே இந்தோனேசியாவால் கைப்பற்றப்பட்டு அந்நாட்டோடு இணைக்கப்பட்டது. மக்களின் எதிர்ப்புப் போராட்டங்களுக்குப்பின், ஏறக்குறைய இரண்டு இலட்சம் உயிரிழப்புகளுக்குப்பின், 1999ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30ஆம் திகதி கிழக்குத் தீமோர் நாட்டு மக்களின் விருப்பம் குறித்த கருத்துக் கணிப்பை நடத்தியது இந்தோனேசிய அரசு. இதில் ஏறக்குறைய 80 விழுக்காட்டு மக்கள் கிழக்கு திமோர் தனி நாடாகச் செல்வதையே விரும்பினர். இருப்பினும் 2002 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி தான் அந்நாட்டின் புது அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு தனி சுதந்திர நாடாக மாறியது. 21ஆம் நூற்றாண்டில் உருவான முதலாவது புதிய நாடாகும் இது.கத்தோலிக்கப் பெரும்பான்மையைக் கொண்ட இரண்டு ஆசிய நாடுகளாக பிலிப்பீன்ஸும் கிழக்கு திமோரும் உள்ளன. கிழக்கு தீமோரின் 14 இலட்சத்து 99 ஆயிரம் மக்கள் தொகையில் 97.8 விழுக்காட்டினர், அதாவது 14 இலட்சத்து 39 ஆயிரம் பேர் கத்தோலிக்கர். இங்கு 3 மறைமாவட்டங்களும், 66 பங்குத் தளங்களும் உள்ளன. 3 ஆயர்கள், 347 அருட்பணியாளர்கள், 1038 பெண்துறவிகள், 1724 மறைக்கல்வி ஆசிரியர்கள் இங்கு பணியாற்றுவதுடன், 325 கல்வி நிலையங்களையும் நடத்துகிறது தலத்திருஅவை. செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் பாப்புவா நியூ கினியிலிருந்து விடைபெற்று கிழக்குத் திமோர் வந்தடையும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அந்நாட்டில் 10ஆம் திகதி முழுவதும் தன் மேய்ப்புப்பணி திட்டங்களை நிறைவு செய்து 11ஆம் திகதி காலை 11 மணியளவில் சிங்கப்பூர் நாட்டிற்கு பயணமாவார்.

**சிங்கப்பூர்**

சிங்கப்பூர் என்பது தென்கிழக்காசியாவில் மலேசியத் தீபகற்பத்தின் தென் முனையில் அமைந்துள்ளது. சிங்கப்பூர் பெரிதும் நகரமயம் ஆன நாடாகும். 1963இல் ஏனைய பிரித்தானியக் குடியேற்றப் பகுதிகளுடன் சேர்ந்து மலேசியாவோடு இணைந்து பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை அடைந்தது. 1965 ஆகஸ்ட் 9இல் மலேசியாவிலிருந்து பிரிந்து, விடுதலை பெற்றுத் தனிக்குடியரசு நாடாக உருவானது. சிங்கப்பூரின் மக்கள்தொகை 82 இலட்சத்து 53 ஆயிரமாகும். மக்கள் தொகையில் பெரும்பாலானோர் சீனர். இவர்களுக்கு அடுத்ததாக மலாய், மற்றும் சிங்கப்பூர் தமிழர்கள் உள்ளனர். சிங்கப்பூரின் அலுவல்முறை மொழிகளாக ஆங்கிலம், சீனம், மலாய் மொழி, தமிழ் ஆகியவை உள்ளன. 56 இலட்சத்து 37 ஆயிரம் மக்கள் தொகையைக் கொண்ட சிங்கப்பூரில் 3.5 விழுக்காட்டினர் கத் தோலிக்கர். அதாவது, 1 இலட்சத்து 76 ஆயிரம் கத்தோலிக்கர் அந்நாட்டில் உள்ளனர். இங்கு ஒரு மறைமாவட்டமும் மூன்று ஆயர்களும், 156 அருட்பணியாளர்களும் 156 பெண்துறவிகளும், 1817 பொது நிலை மறைக்கல்வி ஆசிரியர்களும் உள்ளனர். தலத்திருஅவை 56 கல்வி நிலையங்களை நடத்திவருகிறது. அன்பு நெஞ்சங்களே, நான்கு நாடுகளில் தன் திருத்தூதுப் பயணத்தை மேற்கொள்ளும் நம் திருத்தந்தையின் மறைபரப்புப்பணி பயணம் வெற்றியடைய நம் செபங்களை ஒப்படைப்போம்.

# பாம்புகாட்டி புனித அந்தோனியார் ஆலயமும் பொதுசன பக்தி முயற்சிகளும்



பொதுசன பக்தி முயற்சிகளின் வெளிப்பாடாக காலத்திற்குக்காலம்,இடத்திற்குஇடம்மரியாள்காட்சிகொடுப்பதும், திரு உருவங்களில் இருந்து குருதி சொரிவதும் என்று கேள்விப்படுகிறோம். மக்களின் ஏக்கங்கள், குமுறல்கள், புலம்பல்கள், கண்ணீர்கள், மன்றாட்டுக்களின் பிரதிபலிப்புகளாக இருக்கலாம். இவைகள் ஏன் இடம்பெறுகின்றன என்பது இன்னும் ஒரு கேள்விக் குறி.. இருப்பினும் இறைவன் தனது பிரசன்னத்தை இவைகள் மூலமாக வெளிப்படுத்து வதாகவும் உணரலாம்.

இவ்வாறான நிகழ்வு அண்மைக்காலத்தில் ஏ-32 சங்குப்பிட்டி மன்னார் நெடுஞ்சாலையில், மன்னார் மறை மாவட்டத்தில் சிற்பி ஆற்றுப் படுக்கையில் அமைந்துள்ள புனித அந்தோனியார் ஆலயச் சூழலில் இடம் பெற்றுள்ளது. இக்கோயிலில் இருந்து அண்ணளவாக நாலு கிலோ மீற்றர் தொலைவில், காட்டுக்குள் அதுவும் சிற்பி



ஆற்றுப் படுக்கையில் ஒரு பண்ணையாளர் தனது பாதுகாப்பிற்கு அந்தோனியார் திருவுருவத்தைத் தனது காணி யுடன் இணைத்து வைத்து மன்றாடி வருவது வழக்கம். ஒருமுறை அவரது மகள் காணாமல் போய்விட்டாள். மகள் கிடைக்க வேண்டும் என்ற மன்றாட்டின் பிரதிபலிப்பாக அப்பிள்ளை தன்னை ஒரு முதியவர் கண்டு தன்னை இங்கு விட்டுச் சென்றதாகவும் உரைத்ததாகத் தெரிய வருகிறது. அதன் பிற்பாடு அது கைவிடப்பட்ட இடமாயிருந்தது. அதன் வழி செல்லும் இந்துக்கள் இத்திரு உருவத் தையும், அதைச் சுற்றியுள்ள பாம்புப் புற்றுக்களையும் கண்டு பீதி அடைந்து அவைகளை அமைதிப்படுத்துவதற்கு பாம்புகளுக்கு இரையாகப் பாலூட்டிச் செல்வது வழமை. அவர்களுக்கும் கேட்ட வரங்கள் கிடைத்ததால் அதைக் கிறிஸ்தவர்களுக்கும் அறிமுகப்படுத்தித் தற்போது திரளான மக்கள் குறிப்பாக மாதத்தின் முதல் செவ்வாய் கிழமைகளில் அத்தளத்தைத் தரிசிப்பதற்குச் செல்கின்றனர். மதங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் உருவாகும் இக்காலத்தில் இவ்வாலயம் கிறிஸ்தவ-இந்து மறை களின் நல்லுறவை, நல்லிணக்கத்தை வளர்க்கும் ஒரு பாலமாக அமையலாம் என்று எதிர்பார்க்கலாம்.

**பன்னாட்டு நாகரிகங்களில் பாம்பு வழிபாடுகள்.**

பாம்பை வழிபடும் முறைகள் பன்னாட்டு நாகரிகங்கள், மறைகளில் ஆழமாகப் பதியப்பட்டது ஒன்று. இந்து கம்பூச்சியா, கிழக்கு நாடுகள், கிரேக்கம், பூர்வீக ஐரோப்பா, கன்டினேவியா, ஆபிரிக்கா போன்ற இடங்களில் பாம்பு உருவங்கள், பாம்பு வழிபாட்டுச் சின்னங்கள் செறிந்துள்ளன. இதில் இந்து மத வகிபாகம் பெரிதாக உணரப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளில் ஜெர்மனியில் கூட பாம்பிற்குப் பால் கொடுத்ததாகப் பதிவு ஒன்று உள்ளது. இந்தோ ஐரோப்பிய நாகரிகத்தின் எச்சமாக இது இருக்கலாம்.

**இந்து நாகரீகம்**

**கேட்ட வரங்கள் கிடைத்ததால் அதைக் கிறிஸ்தவர்களுக்கும் அறிமுகப்படுத்தித் தற்போது திரளான மக்கள் குறிப்பாக மாதத்தின் முதல் செவ்வாய்க்கிழமைகளில் அத்தளத்தைத் தரிசிப்பதற்குச் செல்கின்றனர்.**



இந்து மறையில் பாம்பு தனது தோலைக் கழட்டு வதாலும், புதுப்பித்தலினாலும் இதை நிலை வாழ்வினதும் புதுப் பிறப்பினதும் குறியீடு என்று இந்துக்கள் பொதுவாகக் கருதினர். அத்துடன் உயிர் வளத்தின் அடையாளம் என்றும் கருதப்பட்டது. இந்து மறையில் அதிக ஆன்மீக மரபுகளும் அத்துடன் பல மூடநம்பிக்கைகளும் கலந்துள்ளது. நஞ்சு மிகுதியான நாக பாம்புபற்றிபலமூடநம்பிக்கைகள்இருக்கின்றன.அதைக்கொல்வதில்லை. அதை அமைதிப்படுத்துவதற்கு மதச்சடங்குகள் உருவாக்கப்பட்டுள்ளது. சமகாலத்தில் பல இந்துக்கள் பாம்பு மதச் சடங்குகளை நம்புவதில்லை. அது தமக்கும் வீட்டு வளர்ப்பு மிருகங்களுக்கும் ஆபத்து என்று அழித்து விடுவர். நாக பாம்பிற்குக் கோயில்களும் குறிப்பாக நயினாதீவிலும், இலங்கையின் பிற இடங்களிலும் நாக பூசணி அம்பாள் கோயில்கள் உண்டு என்பது மிகத் தெளிவு.

**விவிலியம்**

பாம்பின் இருப்பு விவிலியத்தையும் விட்டு வைக்கவில்லை. எபிரேய மரபில், அல்லது பழைய ஏற்பாட்டில் பாம்பை இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு ஊர்வனங்களில் ஒன்று என்றும், மந்திரவாதிகள் பயன்படுத்தினார்கள் என்றும் அறியக் கிடக்கிறது. கீழ் யுகக் குழப்பத்திற்கும் தீயநாட்டத்தின் ஒரு குறி யீடு பாம்பு என்று கருதினர். அத்துடன் உயிர் கொடுக்கும் வல்லமை, குணமாக்கும் வலிமை, புதுப் பிறப்பின் குறி யீடாகப் பாம்பு கணிக்கப்பட்டது. விடுதலைப் பயண நூலில் மோசஸ், ஆரோன் உடைய கோவில்கள் பாம் பாக மாறியதும், பாலை நிலத்தில் மோசேசால் பாம்பு உயர்த்தப்பட்டது என்பதும் காணக்கிடக்கிறது. புதிய ஏற்பாட்டில் பாம்பு சாத்தானை அடையாளப் படுத்துகிறது.

**எமது பார்வை - ஓர் ஊடறுப்பு**

ஒரு குறுகிய காலத்தில் பல ஆயிரக்கணக்கான மக்கள் சிற்பி ஆறு புனித அந்தோனியார் ஆலயச் சூழலில் குவிதல் இயற்கைக்கு அப்பாற்பட்ட இயல்புத் தன்மை இருப்பதாக உணரப்படுகிறது. ஆதலால் இதன் யதார்த்த நிலையை மதிப்பிட்டு, தீர்வுகள் வழங்காமல் மக்கள் நலன் கருதி பக்தி முயற்சிகளை நெறிப்படுத்தி வழி நடத்துவது ஏற்புடமை.

Taking into account the Influx of numerous people visiting St Antony's Shrine, Sippiaru, within a short period, and the backdrop of the Hindu context with which Christians live here, the devotion could be promoted without issuing judgment on the validity of (the claims about) the event's supernatural elements .

விவிலியமும் திருஅவையும் செய்தி கொடுக்கும் ஊடகமாக, அல்லது தளமாக வர லாறுகள், காவியங்கள், பண்பாடுகளைப் பயன் படுத்தியது தெளிவு. அது இறைவனின் செயல் என்பதை அறிய முடியும். சிற்பி ஆறு புனித அந்தோனியார் ஆலயச் சூழலின் நிகழ்வு, இந்து - கிறிஸ்தவ நல் லிணக்கத்தையும், புரிந்துணர்வையும் புனித அந்தோனியார் வழி வலுப்படுத்தப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியும்.

இது ஒரு மூடநம்பிக்கை என்று சொல்லப் படலாம் (மூட நம்பிக்கையிலிருந்து இறைவன் நம்பிக்கை கொடுக்க வல்லவர்.) அனைத்து மறைகளிலும் கிறிஸ்தவம் உட்பட, மூட நம்பிக்கைகள் செருகி உள்ளன. வத்திக்கான் சங்கம் 2 இற்கு முற்பட்ட காலத்தில் பல மூட நம் பிக்கைகள் இருந்தது மிகத் தெளிவு. சங்கம் அனைத்தை யும் உடைத்தது. அறிவியல் வளர இந்துக்களும், எம்முடன் இணைந்து வழிபடுவதால், அவர்களும் அறி வியல் ரீதியான மாற்றத் தைப் பெறலாம்.

**அருட்பணி அமிர்த யெயசேகரம்**

**வேளாங்கண்ணி அற்புதத்துடன் ஓர் ஒப்புமை**

வேளாங்கண்ணிக் கிரா மத்தில் மரியாள் ஒரு சிறுவனுக்குக் காட்சி கொடுத்த பின்புலத்தில், பானையில் இருந்து பால் வழிந்தது. இங்கும் பாலின் வகிபாகம் உள்ளது. அங்கு பண்ணையாரின் பங்களிப்பு உண்டு. இங்கும் உண்டு. அங்கு பாற்குளம் இங்கு சிப்பியாறு. தமிழ் பண்பாடு பாலை புனிதமாகவும், உயிர் கொடுக்கும் பானமாகவும் பார்க்கிறது. பால் பொங்காத புதுவீடு துறத்தலில்லை.

**(கத்தோலிக் கரால் கவரப்பட்ட புனித அந்தோனியார் தமிழரின் புனித பானமாகிய பால் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். )**

# அன்பின் மகிழ்வு




## பிள்ளைகள் பெற்றோர் மட்டில் உள்ள கடமைகள்

பெற்றோருக்குப் பிள்ளைகள் மட்டில் உள்ள கடமைகள் போல, பிள்ளைகளுக்கும் பெற்றோர் மட்டில் கடமைகள் உண்டு. “உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்களிக்கும் நாட்டில் உன் வாழ் நாட்கள் நீடிக்கும்படி உன் தந்தையையம் தாயையும் மதித்து நட” (விப 20:12) என பரிசுத்த வேத நூலே கூறுகின்றது. எனவே, பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு அன்பும், மதிப்பும் கொடுத்து கீழ்ப்படிந்து வாழ அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கட்டளை தன்னகத்தே ஓர் பெரிய ஆசீர்வாதத்தைக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது உன் தந்தையையும் தாயையும் மதித்து நடக்கும் போது, நீ நீடூழி வாழ்வாய் என்பது தெளிவாக விளக்குகின்றது. எனவே தாய், தந்தையை மதிப்பது ஆண்டவரின் ஓர் அரிய கட்டளை என்பதற்கு மேலாக இது ஒருவர் வாழ்வில் மிகப் பெரும் ஆசீர்வாதததின் ஓர் கால் வாய் ஆகவும் உள்ளது.

இங்கே “மதித்து நட” என்ற கட்டளை வெறும் மதிப்பு என்பதற்கு மேலாக, பிள்ளைகள் தம் பெற்றோர் மட்டில் உள்ள கடமைகளைக் குறையின்றிச் செய்ய வேண்டும். அதாவது பிள்ளைகள் பெற்றோர் மட்டில் அன்புடன் கூடிய அக்கறை கொள்ளுதல், வார்த்தையாலும், செயற்பாடுகளாலும் அவர்களை மதித்தல், அவர்களின் முதுமையில் அவர்களைப் பராமரித்தல் போன்றனவாகும். இன்னும் மேலாக குடும்பத்தில் பிள்ளைகள் தம் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து, அவர்களின் வழி நடத்துதலை தம் சிரமேற் கொண்டு அவர்களுக்கு என்றும் நன்றியுடையவர்களாக வாழ வேண்டும்.

சீராக் ஞானநூல் அழகாக இவ்வாறு சுட்டிக் காட்டுகின்றது, “தந்தையை மதிப்போர் பாவங்களுக்கு கழுவாய் தேடிக் கொள்கின்றார், அன்னையரை மேன்மைப்படுத்துவோர் செல்வம் திரட்டி வைத்திருப்போருக்கு ஒப்பாவார்” (சீ.ஞா 3:3-4) என்று கூறுகின்றது. எனவே தாய், தந்தையை மதிப்போருக்கு இறைவன் விசேட ஆசீர்களை வாக்களிக்கின்றார். முதலாவது, தந்தையை மதிப்போருக்கு கடவுள் பாவமன்னிப்பை வழங்குகின்றார். பெற்றோரை மதிப்பது என்பது ஒரு மிகப்பெரும் புண்ணிய செயலாகும். எனவே கடவுளின் இக் கட்டளையைக் கடைப் பிடிப்பவர், அருளும், மன்னிப்பும் பெறுகின்றார். தந்தையை மதிப்போருக்கு இந்த விலைமதிப்பில்லா இறை ஆசீர் வழங்கப்படுகின்றது.

மேலும் தாயை மேன்மைப்படுத்துவோர் செல்வம் திரட்டி வைப்போருக்கு ஒப்பாவர். தாயை மதித்து அவரை அன்பு செய்து பராமரிப்போர் பெரும் செல்வத்தைச் சேர்த்தவராவர். இவர்கள் இறை ஆசீர் எனும் மிகப்பெரும் செல்வத்தைச் சேகரிக்கின்றனர். “பெற்றோக்கு மதிப்பளிப் பது என்பது தமது வாழ்வின் அவர்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டதன் வெளிப்பாடே புலப்படுகின்றது. “தன் தந்தையை மதிப்பவன் தன் வாழ்நாட்களை நீடிக்கின்றான்” ஆண்டவருக்குக் கீழ்ப்படிபவன் தன் தாய்க்கு ஆறுதல் அளிக்கின்றான் என்கின்றார் புனித ஜோண் கிறிஸ்சோஸ்தம்.

பிள்ளைகள் தங்கள் பெற்றோரிடமிருந்து பெற்றுக் கொண்ட வாழ்வு என்ற கொடைக்காக தினமும் நன்றி செலுத்த வேண்டும். பெற்றோர் தம் பிள்ளைகளை வளர்க்கப்பட்ட கஸ்ரங்களை நினைத்து பிள்ளைகள் அவர்களின் முதிர்ந்த வயதில் அவர்களது ஆன்மீகப் பொருளாதார தேவைகளைப் பூர்த்தி செய்ய கருத்தாய் இருக்க வேண்டும் என்கிறார் புனித இரண்டாம் யோவான் பவுல்.

சரித்திரத்தில் பல மகான்கள் தம் பெற்றோரை மதித்து வாழ்ந்ததைக் காண முடிகின்றது. தன் வன்முறையற்ற போராட்டத்தின் மூலம் இந்திய தேசத்தைச் சுதந்திரத்துக்கு இட்டுச் சென்ற மாமனிதன் மகாத்மா காந்தி தன் தாய் புட்லிபாயில் மிகுந்த மரியாதை கொண்டிருந்தார். தனது தாயின் ஆன்மீகம், அவர் தனது மதத்தில் கொண்ட அர்ப்பணிப்பு, தாயின் நன்னெறி மிக்க வாழ்வு மகாத்மா காந்தியை வெகுவாகப் பாதித்தது.

இவைவே அவரை கடமை ஒழுக்கம் உள்ளவராக வாழ வழி சமைத்தது என்கின்றார். மகாத்மாகாந்தி, தனக்குள் உண்மையையும் கருணையையும் விதைத்தது, தாயிடம் பெற்ற பயிற்சிகளே என்று அடிக்கடி குறிப்பிடுவார். இதன் காரணமாக இவர் தன் தாயில் மிகுந்த மரியாதை கொண்டு, தாயின் போதனைகளைத் தன் வாழ்நாளில் சிரமேற்கொண்டு வாழ்ந்தார்.

பெரும் பாவியாக வாழ்ந்த புனித அகுஸ்தீனார், தன் தாயின் செயல்கள், புனித வாழ்வு போன்றவை காரணமாக இவர் கத்தோலிக்க திருஅவையில் ஒரு மிகப் பெரும் கல்விமானாகவும் புனிதராகவும் மாறினார். எனவேதான் புனித அகஸ்ரீனார் தனது தாய் புனித மொனிக்காள் மட்டில், தான் கொண்டிருந்த மிகப்பெரும் மரியாதையைப் பற்றி அடிக்கடி

**அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்**
**அகவொளி குடும்ப நல மையம்**

குறிப்பிட்டார். அவர் எழுதிய “Confessions” என்ற புத்தகத்தில் இவர் தன் தாய் மட்டில் கொண்டிருந்த மரியாதையையும், நன்றியையும் அடிக்கடி குறிப்பிடுகின்றார். ஏனெனில் தாயின் தியாகம் தான் இவரை மீண்டும் கடவுளின் பாதையில் நடக்கும்படி மனம் மாற்றியது. புனித அகுஸ்தினாரின் வாழ்வு என்றும் அவர் தன் தாய் மட்டில் கொண்டிருந்த அன்பினை வெளிப்படுத்துவதாய் இருந்தது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் வாஸ்ங்டன் தன் தாய் மட்டில் கொண்டிருந்த மரியாதைக்கும் அன்புக்கும் எடுத்துக்காட்டானவராக விளங்கினார். அமெரிக்க நாட்டின் தலைவராகவும், இராணுவ ஜெனரலாகவும் இருந்த போதிலும் தன் தாய்க்குப் பாசத்தையும், மரியாதையையும் செலுத்த ஒரு போதும் நேரத்தை ஒதுக்கத் தவறியவரல்ல. காரணம் இவரின் தாயின் மதிப்பீடுகள், ஒழுக்கம் என்பன இவரின் வாழ்வில் செல்வாக்குச் செலுத்தியது. எனவே தான் எவ்வளவு பதவிகள், பொறுப்புக்கள் இருந்தாலும், தன் தாயை சந்திக்க, மரியாதை செலுத்த, நேரம் ஒதுக்கத் தவறியவரல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆகவே பெற்றோரே நம் கண்கண்ட தெய்வங்கள். அவர்களை எம் நெஞ்சத்தில் வைத்துப் பூசித்து அவர்களுக்கு எம் அன்பையும், மரியாதையையும் காண்பிக்க தவறாது இருப்போமாக!**

## தியாகம்

துரோகிகளிடம் கோபம் இருக்காது! கோபப்படுகிறவர்களிடம் துரோகம் நிச்சயம் இருக்காது. நாட்டை விட்டுக் காட்டிற்குச் சென்றதன் அண்ணன் தலைக்கு விலை வைத்தான் தம்பி. தன்னைக் கண்டு பரிசில் பெறவந்த புலவரிடம், தன் வாளைக் கொடுத்து ‘தன் தலையை வெட்டி எடுத்துச் சென்று என் தம்பியிடம் கொடுத்துப் பரிசை பெற்றுச் செல்க” என்றான் அண்ணன். இவர்கள் எல்லாம் அரைக்க மணம் வீசும் சந்தனம் போன்றவர்கள். தரணியை வென்றவர்கள் தம்மை இழந்தார்கள். தம்மை இழந்தவர்கள் தரணியை வென்றார்கள். ‘நான்’ என்பதை மறந்து ‘நாம்’ என்ற எண்ணம் உதயமாகும்பொழுது உலகம் தம் வசப்படும்.

*நன்றி: இந்த நாள் இனிய நாள்*

## மணமகன் தேவை

வயது - 34
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - A/L
தொழில் : - மின்சாரசபை ஊழியர்
பிரதேச செயலகம் :- வவுனியா

வயது - 27
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - A/L
தொழில் :- முன்பள்ளி ஆசிரியர்
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

வயது - 31
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - வைத்திய பட்டப்படிப்பு
பிரதேச செயலகம் :- திம்பிறிகஸ்யாய

வயது - 24
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - A/L
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

வயது - 27
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - Biosystem Techodogy பட்டதாரி
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

**இவை பற்றிய மேலதிக விபரங்களைப் பெற கீழ் உள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்அகவொளி குடும்ப நல மையம் புனித பத்திரிசியார் வீதி யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கங்கள் 077 - 904 7651, 021- 222 2856, 077- 942 2970.**

## அகவொளி குடும்ப நலமையம் திருமண சேவை





## மணமகள் தேவை

வயது : - 32
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை- O/L
தொழில் :- மின்சாரத்துறை ஊழியர்
பிரதேச செயலகம் - வவுனியா

வயது - 32
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
தொழில் :- Administrative Manager, London
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

வயது - 37
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
தொழில் :- A.C மெக்கானிக்
பிரதேச செயலகம் :- நல்லூர்

வயது - 34
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - O/L
தொழில் :- சாரதி
பிரதேச செயலகம் :- நல்லூர்

வயது - 38
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - O/L
தொழில் :- சாரதி
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

வயது - 43
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - NVQ Leval - 3
தொழில் :- சிறுவர் இணைப்பாளர்
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

வயது - 39
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - Diploma in hotel management
தொழில் :- Hotel ஊழியர்
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

வயது - 36
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - O/L
தொழில் :- கடற்தொழில்
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

வயது - 35
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - HNT - IT
தொழில் :- வியாபாரம்.
பிரதேச செயலகம் :- கரவெட்டி

வயது - 32
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - BA 3ம் ஆண்டு
தொழில் :- சுயதொழில்
பிரதேச செயலகம் :- வவுனியா

வயது - 37
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - A/L
தொழில் :- AC மெக்கானிக்
பிரதேச செயலகம் :- சண்டிலிப்பாய்

# திருச்சிலுவையின் மகிமையுடன் இணையும் திருச்சிலுவைக் கன்னியர்கள்



புரட்டாதி 14ம் திகதியை கத்தோலிக்க திருஅவை திருச்சிலுவையின் மகிமை என்னும் தினமாக நினைவூட்டும்போது அதில் இறையன்பின் வெற்றியையே கொண்டாடுகின்றோம். தமது ஒரே மகனை அளிக்கும் அளவுக்கு இறைவன் உல கின் மேல் அன்பு கூர்ந்தார். இயேசு இல்லாத சிலுவை வல்லமையற்றது. நம் ஆண்டவர் இயேசுவும் தமது வாழ்வில் சிலுவையை ஏற்றுத் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றினார்.

இயேசு சிலுவையில் அறையப்பட்டதனால் மரணத்தை வெற்றி கொண்டது மட்டுமல்ல, விண்ணகக் கதவினையும் திறந்து வைத்தார். இதனால் திருச்சிலுவை மனித குலம் அனைவருக்கும் நம்பிக்கையின், மீட்பின் இரட்சிப்பின் சின்னமாக மாறியது.

திருச்சிலுவை சுய வெறுமையான அன்பு மற்றும் கீழ்ப்படிதலின் சக்திவாய்ந்த அடையாளமுமாகும். இது இறையன்பின் ஆழத்தையும், பாவத்திற்குள் வாழ்ந்த மனுக் குலத்தை மீட்கவும், புதிய வாழ்வுக்கு அழைக்கவும் இறைவன் விரும்பியதைச் சித்தரிக்கின்றது. Orthodox கிறிஸ்தவர்களுக்கு புனித சிலுவை இறையியலின் மையமாக விளங்குகின்றது.

இயேசு நம்மேல் கொண்ட அன்பு மிகுதியினால் சிலுவை மரணத்தை ஏற்றுப் பாடுபட்டு இறந்து மூன்றாம் நாள் உயிர்ப்புப் பெற்றதால் சிலுவை வாழ்க்கை மரமாக மாறியது. (1 கொரி. 1 : 23) சிலுவை யூதருக்கு தடைக்கல்லாகவும், பிற இனத்தாருக்கு மடமையாகவும் இருக்கின்றது. மீட்புப் பெறும் நமக்கோ அது கடவுளின் வல்லமை. மனித ஞானத்தைவிட கடவுளின் மடமை ஞானமிக்கது. மனித வல்லமையை விட இறை வலுவின்மை வலிமைமிக்கது எனப் புனித பவுல் குறிப்பிடுகின்றார்.

திருச்சிலுவையின் திருநாளை மீளவும் நினைவுபடுத்தும்போது சிலுவையை எமது உடலில் தாங்கிச் செல்லும் பெருமையடைவது மட்டுமல்ல சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை நம் வாழ்வால் பறைசாற்றவும் முதன்மைப்படுத்தி ஏற்றுக்கொள்வதும் அவசியமாகும். இது 2வது Nicaea சங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு கத்தோலிக்க மறைக்கல்வி ஏட்டில் (CCC617) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. Council of trent கிறீஸ்துவின் தியாகத்தின் தனித்தன்மையை நித்திய இரட்சிப்பின் ஆதாரமாக வலியுறுத்துகின்றது. திருச்சிலுவையினை மகிமைப்படுத்தல் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இயேசு நம்மைப் பார்த்துக் கூறுகின்றார் நீங்கள் என் சீடராக இருக்க விரும்பினால் லூக். 9:23 “என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள் தோறும் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்” ஆகவே நமது நாளாந்த சிலுவைகளை எடுத்துக் கொண்டு இயேசுவைப் பின்பற்றவும். தன்னலமற்ற மனநிலையுடன் இறைவனையும் பிறரையும் அன்பு செய்து வாழவும் உள்ளத்தில் அமைதி இன்றி வாழும் மனித உள்ளங்களைத் தேடி வாழ்வு கொடுக்கவும் எமக்கு அழைப்பு விடுக்கின்றது.

திருச்சிலுவைக் கன்னியர்களாகிய நாம் “சிலுவையில் தான் மீட்பு” என்பதனை சபையின் விருதுவாக்காகக் கொண்டு 90 வருடங்களுக்கு மேலாக இலங்கை மண்ணில் பணிபுரிந்து வருகின்றோம். 9 மறைமாவட்டங்களிலும் எமது சபையின் குழுமங்கள் ஊடுருவி கல்விப்பணி, சுகநலப்பணி, சமூகப்பணி, மறைக்கல்விப்பணி, உருவாக்கல் பணி, உளவ ஆற்றுப்படுத்தல் எனப் பல்வேறு பணிகளில் திருச்சிலுவையின் அருட் சகோதரிகள் இறையரசின் மதிப்பீடுகளைப் பறைசாற்றி இன, மத, மொழி பேதங்களைக் கடந்து பணியாற்றுகின்றார்கள்.

Capuchin சபையைச் சேர்ந்த அருட்தந்தை தியோடோசியஸ் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு 1844 இல் முதல் அர்ப்பணத்தைப் பெற்ற அருட்சகோதரிகள் திருச்சிலுவையைத் தாங்கியவர்களாக, புனித பிரான்சிஸ் அசிசியாரின் 3வது கட்டளைக்குக் கீழ் இயங்கும் துறவற சபையாக, அறிமுகப்படுத்தத் தீர்மானித்தார். திருச்சிலுவையின் அருட்சகோதரிகள் தமது அர்ப்பணிப்பு மிக்க பணியால் திருச்சிலுவையை மகிமைப்படுத்தவேண்டுமென விரும்பினார். அவரது ஆசையை எமது சபையில் முதல் அருட்சகோதரியாக ஆரம்பித்த அன்னை பேர்ணாடா நிறைவேற்றி திருச்சிலுவைக் கன்னியர் (Menzinyen) சபையாக இன்று வரை பயணித்திட 180 வருடங்களுக்கு முன்பாகவே வித்திட்டவர்.

இளம் உள்ளங்களுக்குக் கல்வியறிவை வழங்குவதன் மூலம் சிறந்த சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட திருச்சிலுவைக் கன்னியர்களின் பணி, கால நீரோட்டத்தில் ஏற்பட்ட சூழல், சமூக, சமய, அரசியல், அனர்த்த மாற்றங்களுக்கேற்ப காலத்தில் தேவையே இறைசித்தம்” என தமது சேவைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி இலங்கையில் 22 பிரதேசங்களில் திருச்சிலுவைக் கன்னியர்கள் தமது விருட்சக் கிளைகளைப் பரப்பியுள்ளனர்.

மனித வாழ்வின் கருவறை தொடங்கி கல்லறை வரை எமது பணிகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இதற்குச் சான்றாக பாடசாலைகள், வைத்தியசாலைகள், முதியோர் இல்லங்கள் விளங்குகின்றன.

நவீன, விஞ்ஞான தொழிநுட்ப யுகங்களில் வாழும் இன்றைய இனத் தலைமுறையினர் திறன் தொலைபேசிகளிலும் ,சமூக ஊடகங்களிலும், இணைய வலைத்தளங்களிலும் தம்மைத் தொலைத்து ஒழுக்க விழுமியங்களையும் சமயம் சார்ந்த பய பக்தியையும், மனித மாண்பை மதிக்கும் பண்புகளையும் இழந்து வருகின்றனர். இதனால் ஆசிய நாடுகளிலும் துறவற அழைத்தல்கள் அருகியுள்ளன. இந்நிலையில் துறவற சபைகளின் ஆரம்ப நோக்கங்களும், பணி இலக்குகளும் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளப்படுகிறது. சவால் நிறைந்ததாக உள்ளது. இதற்கு திருச்சிலுவைக் கன்னியர் சபை அருட்சகோதரிகளும் விதிவிலக்கல்ல. எந்த நிலை வந்தாலும் தொடர்ந்தும் ஏற்றுக்கொண்ட அர்ப்பண வாழ்வை சபையின் தனித்தன்மை குன்றாமல் பயணிக்கச் செய்வது இறைவனின் வல்லமையுள்ள பராமரிப்பினால் என்றால் வியப்புக்குரியதே.

அருட்சகோதரி றோமலா அன்ரனி

திருச்சிலுவையை மகிமைப்படுத்தும் நமக்கு தியாகம் நிறைந்த அன்பு, மற்றும் பணிவு கொண்ட வாழ்வு, வெறுமை நிலை என்பன ஒரு நிலையான நினைவூட்டலாக நம் இதயங்களில் திரும்பத் திரும்ப கேட்டுக்கொண்டிருக்க வேண்டும். பிறருக்காகத் தன்னைத் தாழ்த்திய கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற தினமும் அழைக்கின்றது. திருச்சிலுவையை நம்பும் அனைவருக்கும் ஆன்மீக பயணத்தையும் மரணத்தின் மீது கிறிஸ்து ஈட்டிய வெற்றியையம் நினைவூட்டுகிறது. அத்துடன் திருச்சிலுவை சீடத்துவத்தின் சின்னமாகவும் விசுவாச வாழ்விற்கு வலுவூட்டும் சக்தியாகவும் விளங்குகின்றது. எனவே திருச்சிலுவையை நாம் எமது உடலில் தாங்கிச் செல்லும் போதெல்லாம் இயேசுவைப் பின்பற்றவும், தன்னலமற்ற மனநிலையுடன் பிறருக்கு நன்மை செய்து முன்மாதிரிகையாக வாழ்கின்ற ஒரு அழைப்பு எப்போதும் நமக்கு நினைவூட்டப்படுகின்றது.

---

**கிறிஸ்தவ மரபுரிமைச் சொத்துக்கள்**


# யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம்

**சமூகத்தின் தொன்மையைப் பேணி அதன் நிலைத்திருப்பிற்கு ஆணி வேராய் அமைவது மரபுரிமைச் சொத்துக்கள் ஆகும்.**

**இலங்கையில் கிறிஸ்தவ மறை வேரூன்றி மூன்று நூற்றாண்டுகளுக்கு மேல் கழிந்து விட்டன. கடந்து போன காலத்தின் எமது வாழ்வியலைக் கையகப்படுத்தி அடுத்த தலைமுறைக்கு வழங்க வேண்டிய கடப்பாடு இன்றைய தலைமுறையினருக்கு உண்டு. எமது பாரம்பரிய தடங்களாகக் காணப்படக்கூடிய வரலாற்று இடங்கள், கட்டடங்கள், இயற்கைச் சிறப்புக்கள்,பண்பாட்டு அடையாளங்கள், கலை கலாசார வடிவங்கள் போன்றவற்றை தனியடையாளங்களாகப் பேணும் நோக்குடன் மெய்ப்போலி மரபுரிமை வடிவில்(Virtual heritage) எழுதப்படுகின்ற கட்டுரைகளை பகிர்வதும் களஞ்சியப்படுத்துவதும் அவசியமானதாகும்.**

**இதனை நோக்காகக் கொண்டு யாழ்ப்பாண பல்கலைக் கழக சிரேஷ்ட விரவுரையாளர் பாக்கியநாதன் அகிலன் அவர்களின் கூகாலத்தின் விளிம்பு யாழ்ப்பாணத்தின் மரபுரிமைகளும் அவற்றைப் பாதுகாத்தலும் என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்ட இக் கட்டுரை பாதுகாவலன் இதழில் பகிரப்படுகிறது.**

ஆயர் பெற்றாச்சினி வடக்கு மறை மாவட்ட ஆயராக இருந்த காலகட்டத்தில் (1846-1885) இரண்டு கத்தோலிக்க ஆங்கிலப் பாடசாலைகள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஆண்களுக்காக ஆரம்பிக்கப்பட்டதே இன்றைய புனித சம்பத்தரிசியார் கல்லூரி. யாழ்ப்பாண பழைய நீதிமன்றச் சுற்றாடலில் யாழ்ப்பாணம் பழைய வாடி வீடு அமைக்கப்பட்ட காணிக்குள் அதற்கு முன்பதாகப் பெண்களுக்கான ஒரு பாடசாலையும் அமைக்கப்பட்டது. திருமதி மேரி ஆன் ஓ பிளானகன் மற்றும் அவரது மூத்த மகளான கத்தரின் ஓ பிளானகன்



பப்சி மரியதாசன்

ஆகியோரால் நடத்தப்பட்ட மேற்படி பாடசாலையே பின்னர் திருக் குடும்பக் கன்னியர் மடமாக மாற்றப்படுகிறது. 1862 இல் ஆயர் பெற்றாச்சினியைத் தொடர்ந்து வடக்கு மறை மாவட்ட ஆயராகப் பொறுப்பேற்றுக் கொண்ட ஆயர் சமேரியா 1862 இல் ஐரோப் பாவில் இருந்து ஆறு திருக்குடும்பக் கன்னியரை அழைத்து வந்தார். இவர்களே இலங்கைக்கு வந்த கத்தோலிக்க சமயத்தின் முதற் பெண் துறவியாவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 24 மே 1862இல் தற்போதைய இடத்தில் திருக்குடும்ப கன்னியர் மடத்துக்கு அடிக்கல் இடப்பட்டது. அவ்விடத்தில் இருந்ததாகக் கூறப்படும் மஞ்சள் கரைச் சான் குளத்தை அருகிலிருந்த தேவநீர் குளத்து மண்ணெடுத்து நிரப்பி இவ்விடம் உருவாக் கப்பட்டதுடன் 1870களில் இவ் வேலைகள் பூரணப்படுத்தப்பட்டன.

1862களில் இருந்து 1969 வரை ஒரு நூற்றாண்டுக்கு மேலாக ஐரோப்பியத் திருக்குடும்பக் கன்னியர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்த இந்த நிறுவனத்தின் முதல் சுதேசிய திருக்குடும்ப கன்னியாக மாட்டினா பொறுப்பேற்றார்.

யாழ்ப்பாணத்திலீருந்து பின்னர் இலங்கை முழுமைக்குமான திருக்குடும்பக் கன்னியர் மடங்கள் வியாபித்துச் சென்றுள்ளன. இன்று எம்மிடம் உள்ள மூத்த கட்டடக் கலை வெளிப்பாடுகளின் ஒரு தொகுதியைத் திருக்குடும்ப கன்னியர் மடங்கள் நல்ல முறையில் பேணி வருகின்றன என்பது அதன் சமூக, பண்பாட்டு வரலாற்றோடு சேர்த்து அதற்குப் பெருமை சேர்க்கிறது. வெவ்வேறு கால கட்டங்களைச் சேர்ந்த இணைப்புக்கள் (Additions) உள்ளனவாயினும் அதன் மூலம் கெடாது அதன் தொடர்ச்சியாகவுள்ள இக்கட்டடங்களின் மூத்த தொகுதி இன்னும் இரு வருடங்களில் தமது 150 ஆவது வருடத்தினைக் (2012இல்) கொண்டாடவுள்ளன.

எளிமையான, ஆனால் மிடுக்கும் பாரிய தன்மையுமுடைய இக்கட்டுமானம் ஐரோப்பிய செந்நெறிக் கட்டடக் கலையின் (Classical Architecture) பரந்துபட்ட செல் வாக்கிற்குட்பட்ட ஒரு கட்டுமானமாகும். அவ்வகையில் இக்கட்டடங்கள் எமது காலனித்துவ கால கட்டட வரலாற்றின் முதன்மைச் சான்றுகளில் ஒன்றாக - வாழும் உதாரணமாக உள்ளன.

குறிப்பாக டொறிக் (Doric) எனப்படும் கிரேக்க கட்டடக் கலைப்பாணியின் ரோமானிய வகைக்குரிய ரஸ்கன் (Tuscan) பாணிக்குரிய பாரிய பீடமுடைத்தூண்களால் தூக்கி நிறுத்தப்பட்டுள்ள இக்கட்டுமானம் தனது வளாகத்தின் ஒரு பகுதியாக ஒரு தேவாலயத்தினையும் கொண்டுள்ளது. பழைய சாயக் கண்ணாடி (Stained glass) வேலைப்பாடுகளையுடைய சாளரங்கள், கதவுகளைக் கொண்டுள்ள மேற்படித் தேவாலயத்தின் பாடகர் பகுதி, மாடி முகப்பாக (Balcony) அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

உயரமும், எளிமையையும், விசாலமும் உடைய நிரற்தூண்களுடைய அதன் விறாந்தை களும் எமது கட்டடக் கலைப் பாரம்பரியத்தின் சிறப்புக் கூறுகள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

## இவர்களால் முடிந்தது என்றால் உங்களாலும்....!

# ஆசிரியர்களே நல்வாழ்த்துக்கள்...,!



ஆண்டின் ஒவ்வொரு நாளுக்கும் ஏதாவதொரு சிறப்பு உண்டு. யார் யாருக்காக எடுக்கும் விழா என்பதைப் பொறுத்தே அந்த நாள் முக்கியத்துவம் பெறும். இந்த அடிப்படையில் பெரும்பான்மையான விழாக்களுக்கான முக்கியத்துவம் நினைவூட்டப்பட வேண்டி வரும். ஆனால், ஆசிரியர் தினமான செப்டம்பர் 5, டாக்டர் இராதா கிருஷ்ணன் பிறந்த நாள் என்பதால் மட்டு மல்ல: ஆசிரியர் தினமாகக் கொண்டா டப்படுவதால், இதற்கான முக்கியத்துவம் ஆண்டுக்கு ஆண்டு கூடிக்கொண்டே வருகிறது. ஏனெனில், இந்நாள் மாணவர்கள் தங்களைப் பயிற்றுவித்த, பயிற்று வித்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்களுக்கு எடுக்கும் விழா, எவ்வளவு உயரத்துக்கு ஏறிச் சென் றாலும், ஏறிவர உதவிய ஆசிரியர்களை மக்கள் மறப்ப தில்லை.

மாணவர்கள் கொண்டாடுவது ஒருபுறம் இருக்க, ஒவ்வோர் ஆசிரியரும் தன்னைத்தானே மதிப்பீடு செய்யும் நாளாகவும், புதுப்பித்துக்கொள்ளும் நாளாகவும் இந்நாள் அமைய வேண்டும். ஏனெனில், இந் நாள்களில் கற்றல்-கற்பித்தல் பணி சாதாரண மானதல்ல. சவால்கள் நிறைந்தது. பலரும் நினைப்பது போன்ற உள்ளீடு-வெளியீடு (கண்ணுக்குப் புலனாகும்) அல்ல மனமும் உடலும் உள்ளமும் கொண்ட, உயிரும் ஆற்றலும் கொண்ட குழந்தைகள் மீது செலவிடும் நேரமும் உழைப்பும் ஆகும். இதன் பலனை ஏனையவற்றைப் போல உடனுக்குடன் அளக்கவும் முடியாது, பார்க்கவும் இயலாது. கற்றலின் முழு பயனையும் மாணவன் அனு பவிக்கும்போது, அவனுக்குக் கற்றுக் கொடுத்த ஆசிரியர் எங்கேயோ இருப்பார். ஆனால், நன்றியுணர்வோடு நினைவுகூரப்படுவார்.

“மனித வாழ்க்கையானது மிதிவண்டியில் பயணம் செய்வதைப் போன்றது. அது சமநிலையில் சாயாது செல்ல வேண்டுமானால், அது முன்னோக்கிச் சென்றுகொண்டே இருக்க வேண்டும்” என்று

மிகப்பெரும் விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் குறிப்பிடுவார். மிதிவண்டியில் இரண்டு சக்கரங்கள் உள்ளன என்பது நம் அனைவருக்கும் தெரியும். அவை சமமாக இயங்க வேண்டும். பணிபொறுப்பு என்றால், பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு மற்றொரு சக்கரம் பயிற்றுவிக்கும் மாணவர்களின் முழு ஆளுமை வளர்ச்சியாக இருக்க வேண்டும்.

இன்றைய ஆசிரியர் பணி சென்ற நூற் றாண்டைப் போன்று மதிப்பானதும், சிரமமற்றதும் அல்ல் படிப்புக்குத் தேவையான பொருட்கள் மட்டுமே இருக்க வேண்டிய புத்தகப் பைகளில், போதைப் பொருள்களும், பேனா பிடிக்க வேண்டிய கைகள் சிலவற்றில் துப்பாக்கியும் இருக்கும் காலமாக இக்காலம் மாறிவருகிறது. இவை எங்கேயோ வெளிநாடுகளில் மட்டுமல்ல, நம் நாட்டிலும்கூட. பச்சிளம் குழந்தையாகப் பத்து ஆண்டு முன்பு அழுதுகொண்டே பெற்றோரின் கைகளை இறுகப் பற்றிக்கொண்டு பள்ளிக்கு வந்த குழந்தை, பத்து ஆண்டுகளின் முடிவில் அறத்துக்குப் புறம்பான செயல்களில் ஈடுபடுகிறதென்றால் ஒருவகை யில் ஆசிரியர்களான நாமும் காரணமோ!

தவறு செய்யும் மாணவர்களைத் தண்டிக்கக் கூடாது. தப்பு செய்யும் குழந்தைகளைத் தட்டிக் கேட்கக்கூடாது என்று இருக்கும் இன்றைய நிலை யில், ஆசிரியர்களால் எதுவும் செய்ய முடியாத நிலை இப்போது என்றால் அது மிகையாகாது. ‘அறப்பணி யாம் ஆசிரியப் பணிக்கு உன்னை அர்ப்பணி’ என்ற நிலை திரும்புமா? திரும்பவும் வேண்டும் தாகத்தோடு பள்ளிக்கூடங்களுக்கு மாணவர்கள் படிக்க வரும் சூழலும் உருவாக வேண்டும். நம்புவோம். செடி யில் ஈரம் இருக்கும் வரை வேர்கள் காய்வதில்லை. இலைகள் உதிர்வதில்லை. நம்மில் நம்பிக்கை இருப்பது வரை நாமும் தோற்றுப்போவதில்லை.

**அன்பான ஆசிரியர்களுக்கு!**

மதிப்பெண்களை மட்டும் வைத்து உங்கள் வகுப்பில் பயிலும் மாணவர்களை நீங்கள் ஒரு போதும் எடை போடாதீர்கள். அவர்களுக்குள் உங்கள் அறிவுக்கு எட்டாத ஒரு கலைஞன் இருக்கலாம். நீங்கள் கற்றுக்கொடுக்கும் கணிதம் அவனுக்குத் தேவையும் படாது, புரியவும் செய்யாது. ஏதோ ஒரு மூலையில் வருங்கால தொழிலதிபர் தூங்கிய நிலையில் அமர்ந்திருக்கலாம். அவனுக்கு நீங்கள் கற்பிக் கும் அறிவியல் பாடம் புரியாது. ஒரு சிறந்த எழுத்தாளர், இசைஞானி, விளையாட்டு வீரன், மருத்துவர் என அமர்ந்திருப் பார்கள். உங்கள் கண்களுக்கு அவை மறைக்கப்பட்டிருக்கும். அவரவர் திறமைக்கு ஏற்ப வாழ வழிகாட்டுவதே ஒவ்வோர் ஆசிரியரின் கடமை. எங்கோ வாசித்த ஒருசில வரிகளை இங்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ‘நாம் எப்படி வாழ்ந்தால் நமது வெற்றியை யாரும் தடுக்க முடியாது?’ என்ற தலைப்பில் அது எழுதப்பட்டிருந்தது.

**‘உலாவரும் காற்றாக நீங்கள் இருந்தால்,**
**உங்களை யாரும் தடுக்க முடியாது:**
**அலையடிக்கும் கடலாக நீங்கள் வாழ்ந்தால்,**
**உங்களை யாரும் அளக்க முடியாது.**
**பெய்யும் மழையாக நீங்கள் இயங்கினால்,**
**உங்களை யாரும் வேண்டாம் என மாட்டார்கள்!**
**மலைபோல நீங்கள் உயர்ந்து நின்றால்,**
**உங்களை யாரும் மறைக்க முடியாது!**
**கடின உழைப்போடு நீங்கள்**
**செயற்பட்டால், உங்களது வெற்றியை**
**யாரும் தடுக்க முடியாது!’**

இவற்றை வாழ்ந்து காட்டுவதன் மூலம் மட்டுமே மாணவர்களுக்குக் கற்பியுங்கள். வெறும் வாய் வார்த்தை களால் இவற்றைப் புரிய வைக்க இயலாது. வாழ்ந்து காட்டுவதைப் பயிலும் மாணவன் தோற்றுப் போகவும் மாட்டான், உயிரை மாய்த்துக்கொள்ளவும் மாட்டான் சமுதாயத்தில் நஞ்சாக மாறவும் மாட்டான்.

அ.மரிய தெரேசா

அலையடிக்கும் கடலாக நீங்கள் வாழ்ந்தால்,
உங்களை யாரும் அளக்க முடியாது.
பெய்யும் மழையாக நீங்கள் இயங்கினால்,
உங்களை யாரும் வேண்டாம் என மாட்டார்கள்!
மலைபோல நீங்கள் உயர்ந்து நின்றால்,
உங்களை யாரும் மறைக்க முடியாது!
கடின உழைப்போடு நீங்கள் செயல்பட்டால்,
உங்களது வெற்றியை யாரும் தடுக்க முடியாது!’

காட்டில் வளரும் மூங்கில்களில் எந்த மூங்கில் புல்லாங் குழலாய் மாறும் என யாருக்கும் தெரியாது. தாம் கற்பிக்க வேண்டிய பாடப்பகுதியைப் பிழை இல்லாமல் பயிற்று விப்பதும், முழு மனிதனாக வாழத் தூண்டுவதும் மட்டுமே ஆசிரியர்களின் கடமை. ஐந்து அல்லது பத்து மதிப்பெண் களைக் கூடுதலாக வாங்க வைப்பதற்காக அவர்களது மூளையைச் சலவை செய்து, நுண்ணறிவை மழுங்கச் செய்து, இரசனையைத் திசைமாற்றி, விளையாட்டைக் குறைக்க வைத்து, பொழுது போக்குகளைப் பார்க்கவிடாமல் கண்களுக்குக் கடிவாளம் போட்டு, சாவி கொடுத்த பொம்மை போல் இயங்க விடுவதால் என்ன இலாபம்? அவனுக்கு நீண்டகால சாதனை எப்படிச் சாத்தியமாகும்?

மருத்துவமும் பொறியியலும் மட்டுமே படிப்பு அல்ல. தொழில்நுட்பமும் அறிவியலும் பல்வேறு திசை களில் கிளைகள் பரப்பி வளர்ந்து வருகின்றன. சாதிக்க எத்தனையோ துறைகள் உள்ளன, எத்தனையோ கலைகள் உள்ளன என்பதையும், ஒவ்வொரு மாணவனைக் குறித்தும் படைத்தவனுக்கு ஒரு கனவு உண்டு என்பதையும், அதை நிறை வேற்றப் போதுமான தாலந்துகள் தரப்பட்டுள்ளன என்பதையும், தாயின் கருவில் உருவாகும்போது, எத்தனையோ உயிரணுக்களோடு போட்டியிட்டு வென்றவனால் எதையும் சாதிக்க முடியும் என்பதை யும் புரிய வையுங்கள். தோல்விகள் வரும்போது துவண்டு போகக்கூடாது என்பதை மாணவன் கற்றுக்கொள்வான்.

உங்கள் ஆசிரியப் பயிற்சி பெற்று, மாணவர்களைப் பயிற்றுவிப்பதால் வருமானம் ஈட்டுவதோடு ஆசிரியப் பணி முடிந்துவிடுவதில்லை. ஒரு நல்ல ஆசிரியர் மாணவர்களின் உள்ளத்தில் இடம்பிடிக்க வேண்டும். அப்படிப்பட்ட ஆசிரியரே சிறந்த ஆசிரியராக விளங்க முடியும். ‘என்னுடைய உயர்வுக்கு இந்த ஆசிரியரே காரணம் என் வாழ்வுக்குத் திருப்புமுனை இவர்தான் இந்தப் பணியில் நான் அமரன் ஆசிரியரே காரணம் இன்று நான் பேச்சாளனாக, பாடகராக, உயர் அதிகாரி யாக, தொழில் வல்லுனராக மாற இவரே காரணம்’ என உங்களிடம் பயின்ற ஒரு மாணவனா வது உங்களைக் குறித்துச் சொல்வானேயானால் உண்மையாகவே நீங்கள் நல்லாசிரியரே!

ஒரு முக்கியமான நிகழ்ச்சியின்போது வயதான ஆசிரியர் ஒருவரின் கால்களைத் தொட்டு வணங்கி ‘என்னைத் தெரிகிறதா?’ என்று கேட்டு நின்றான் வாலிபன் ஒருவன். அவருக்கு அவனைத் தெரியவில்லை. குறிப்பிட்ட ஆண்டைச் சொல்லி நினைவுபடுத்தக் கேட்டுக் கொண்டான். அப்போதும் அவருக்கு அவனைத் தெரியவில்லை. ‘உங்களால்தான் இப்போது நான் ஓர் ஆசிரியராக விருது வாங்கும் நிலைக்கு உயர்ந்திருக்கின் றேன்’ என்றான் அவன். ‘அப்படி நான் உனக்கு என்னதான் செய்துவிட் டேன்?’ என ஆச்சரியமாகக் கேட்டார் அந்த வயதான ஆசிரியர். அவன் கூறலானான்:

“நான் 6-ஆம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தபோது கையில் கடிகாரம் கட்ட வேண்டும் என்பது எனது நீண்டகால ஆசையாக இருந்தது. வீட்டிலோ வாங்கித்தர வசதி இல்லை. பக்கத்தில் இருந்த மாணவன் அவனது புத்தகப் பையில் ஒரு கைக்கடி காரத்தை வைத்திருந்தான். அதை எப்படியாவது எனதாக்கிக் கொள்ளத் திட்டமிட்டேன். வகுப்பில் யாரும் இல்லாத நேரத்தில் அதை எடுத்து எனது அரைக்கால் சட்டையில் (நிக்கர்) மறைத்து வைத்துக்கொண்டேன்.

தனது பையில் வைத்திருந்த கைக்கடி காரத்தை காணாததால் அந்த மாணவன் உங்க-ளிடம் முறையிட்டான். நீங்கள் மாணவர்கள் எல்லாரையும் எழும்பி நிற்க வைத்துக் கண்களை இறுக மூடச் சொன்னீர்கள். ஒவ்வொருவர் பாக்கெட்டிலும் கையை விட்டுத் தேடினீர்கள். என் பாக்கெட்டில் தேடினபோது கைக்கடிகாரத்தை எடுத்தீர்கள். ‘இன்றோடு தொலைந்தோம்’ எனப் பயந்து நடுங்கினேன். நீங்கள் என்னிடம் எதையும் கேட்கவும் இல்லை தண்டிக்கவும் இல்லை. கோபப்படவும் இல்லை. யாரிடமும் என்னைப் பற்றிச் சொல்லவும் இல்லை.

அன்று என்னுடைய வாழ்வில் மிக முக்கியமான தீர்மானம் எடுத்தேன். யாருடைய பொருள்கள் மீதும் ஆசை வைக்கக்கூடாது என்றும், எந்தச் சூழலிலும் பிறர் பொருளை எடுக்கக்கூடாது என்றும், வளர்ந்து ஆசிரியராகப் பணி செய்ய வேண்டும் என்றும் திட்டமிட்டேன். இன்று அனைத்தையும் கடைப் பிடிப்பவனாக இதோ நான் உங்கள் முன்பு நிற்கின் றேன். இப்போதாவது என்னை நினைவிருக்கிறதா?” என்று மீண்டும் கேட்டான் அந்த வாலிபன். அப்போதும் அந்த வயதான ஆசிரியர் ‘இல்லை’ என்றார். “தேடும் நேரத்தில் நானும் உங்களைப்போல கண்களை இறுக மூடியிருந்தேன்” என்றார் ஆசிரியர். அன்றைய அந்த ஆசிரியரால் முடிந்தது என்றால், இதைப்போல் செயல்பட தற்போதைய ஆசிரியர் களாலும் முடியும்.

உலகில் புனிதமான இடங்கள் இரண்டு என்பர்.

1. **தாயின் கருவறை,**
2. **பள்ளியின் வகுப்பறை.**

இந்த இரண்டும் பாவமற்றதாக, பாரபட்சமற்ற-தாக இருந்தால், வேறு என்ன வேண்டும் இன்றைய இளம் தலைமுறையினருக்கு!




# ஏன் கேள்விக்கென்ன பதில்!

அருட்பணி செ. அன்புராசா

*(அதிசயா, யாழ்ப்பாணம்)*

**கே: கடந்த வாரம், “ 'ஆரியசிங்க' வினால் அன்புராசா உள்நாட்டிலும் புலம் பெயர் தேசங்களிலும் அதிகமாக அறியப்பட்டிருக்கின்றார் என்று கூறலாமா?” எனக் கேட்கப்பட்ட கேள்விக்குக் 'கூறலாம்' என்ற பதிலையும் நீங்கள் அளித்திருந்தீர்கள். இக்கேள்வியின் பின்னணியைக் கூறமுடியுமா?**

ப: அதிசயா, உங்கள் கேள்வியைப் படிக்க அதிசயமாக மட்டுமல்ல ஆச்சரியமாகவும் இருக்கின்றது! நீர் ஒருவர்தான் ஜெருசலேமில் நடந்ததை அறியாத ஒருவராக இருக்கின்றீர் போலும்!

*(சுகி, கொழும்பு)*

**கே: வாழ்க்கையில் பல துன்பங்களை அடுத்தடுத்துச் சந்திக்க வேண்டி இருக்கின்றது! சில வேளைகளில் வாழ்க்கை வேண்டாம் என்று மனம் சலித்துப் போகின்றது! ஒரு ஆலோசனை கூறுவீர்களா?**

ப: சுகி, 'சிறகு கிடைத்தால் பறப்பது மட்டும் வாழ்க்கையல்ல, சிலுவை கிடைத்தால் சுமப்பதும்தான் வாழ்க்கை!' என்பார் கவியரசு கண்ணதாசன். சிந்தித்துப் பாருங்கள். தெளிவு கிடைக்கும்!

*(ஆனந்தன், கிளிநொச்சி)*

**கே: நமது சமூகத்தின் போக்கினை அவதானிக்கின்றபோது மிகவும் கவலைக் கிடமாக இருப்பதுபோல் படுகின்றது! மிக வும் அடிமட்ட நிலையில்தான் எல்லாமே இருக்கின்றது. பார்வைக்கு எல்லாம் நன்றாக இருப்பதுபோல் தெரிகின்றது. மேல் மட்டம் தொடக்கம் கீழ்மட்டம் வரை எல்லாமே தலைகீழாகத்தான் நடக்கின்றது. ஆக்கபூர்வமாகச் சிந்தித்துச்செயற்படுகின்றார்கள் இல்லை அல்லது சிந்திப்பவர்களையும் விடுகின்றார்கள் இல்லை. நம் சமூகத்திற்கு என்ன பிடித்திருக்கின்றது?**

ப: ஆனந்தன், பிடிக்கவில்லை, பீடித்திருக்கின்றது! புகழ் பெற்ற ரஷ்ய எழுத்தாளரான அன்ரன் செக்கோவ்விடம் ஒருதடவை, “தோல்வியுற்ற ஒரு சமூகம் எப்படியிருக்கும்?” என்று கேட்கப்பட்டிருக்கின்றது. இக்கேள்விக்கு, 'தோல்வியடைந்த சமூகங்களில், ஆரோக்கியமாகச் சிந்திக்கும் ஒவ்வொருவனுக்கும் எதிராக ஆயிரம் முட்டாள்கள் களத்திலிருப்பார்கள். அவ்வாறே, சிந்தனையோடும் கரிசனையோடும் உதிர்க்கப்படும் ஒவ்வொரு சொல்லுக்கும் எதிராக தேவ-ரீமானதும் முட்டாள்தனமானதுமான ஆயிரம் சொற்கள் உதிர்க்கப்படும். அங்கே பெரும்பான்மை முட்டாள்தனத்தினாலேயே போஷிக்கப்பட்டிருக்கும். எந்த சமூகத்தில் அற்பமான விடயங்கள் பெரும் தலைப்புகளாக மாற்றப்பட்டு, நல்லுணர்ச்சி பெறும் வகையிலான சிந்தனைகளையெல்லாம் மிகைத்ததாக அவை இடம்பிடித்திருக்கின்றனவோ, எந்த சமூகத்தில் அதன் களத்தை அற்பர்கள் ஆக்கிரமித்திருக்கிறார்களோ, அதுவே தோல்வியடைந்த சமூகமாகும்!' எனப் பதிலளித்தாராம் அன்ரன் செக்கோவ். நாம் வாழும் சமூகத்தையும் இக்கருத்தோடு வைத்துப் பாருங்கள்.

*(சங்கர், யாழ்ப்பாணம்)*

**கே: சங்கு முழங்குமா? அல்லது சங்கு ஊதுவார்களா?**

ப: சங்கர், சங்கு முழங்குவதும், சங்கு ஊதுவதும் நமது கைகளில்தான் இருக்கின்றது. சங்கு, இப்போதுதான் முழங்கத் தொடங்கியிருக்கின்றது. முழங்கும்! நிற்க, சங்கு முழங்கினால் சிலருக்குச் சங்கு ஊதவேண்டித்தான் வரும்!

*(நாதன், யாழ்ப்பாணம்)*

**கே: தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதால் என்ன நன்மை கிடைக்கப்போகின்றது?**

ப: நிறுத்துவதால் என்ன தீமை நிகழப்போகின்றது என்று கூறுங்கள். பின்னர் என்ன நன்மை கிடைக்கும் என்று கூறுகின்றேன். இனியும் எம்மை விற்றுத் தின்னும் முதலைகள் இப்போது விழிக்கத் தொடங்கியிருக்கின்றார்கள். அதுவே சங்குக்கு முதல் வெற்றி! தேர்தல் காலத்தின்போது அரசியல் தீர்வு குறித்துப் பேசுபவர்கள் ஏன் மற்றைய காலங்களில் அதுபற்றி அலட்டிக் கொள்ளவில்லை! ஒன்றைக் கவனிக்கவேண்டும்! இவர்கள் எல்லோரும் பின்பற்றுவது ஒரே 'சிலபஸ்' தான் (பாடத்திட்டம்தான்)!

## உடன் பிறந்த உறவு...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மூன்று நற்பண்புகளும், ஒரு திருஅவையாக, உங்களின் ஒன்றிணைந்த பயணத்தையும், இனரீதியாகவும் கலாசார ரீதியாகவும் வேறுபட்ட உங்களின் குணாதிசயங்களையும் நன்றாக வெளிப்படுத்துகின்றன.

ஆகவே, எனது சிந்தனைகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விழைகிறேன். நம்பிக்கை தாவரங்கள் மற்றும் வனவிலங்குகள், எரிசக்தி ஆதாரங்கள், மூலப் பொருட்கள் மற்றும் பலவற்றின் அடிப்படையில் இந்தோனேசியா பல இயற்கை வளங்களைக் கொண்டுள்ள ஒரு பெரியநாடு. மேலோட்டமாகப் பார்த்தால், அத்தகைய வளங்கள் தற்பெருமை அல்லது ஆணவத்திற்கு ஒரு காரணமாக இருக்கலாம், ஆனால் திறந்த மனதுடனும் இதயத்துடனும் இவற்றைக் கருதும்போது, திருவிவிலியம் நமக்குக் கற்பிப்பது போன்று (காண்க. தொநூ 1 சீராக் 42:15 43:33) இந்த இயற்கை வளங்கள் கடவுளை, பேரண்ட வெளியிலும், நம் வாழ்விலும், இருப்பதை நினைவூட்டுவதாக இருக்கும்.

இயற்கை வளங்கள் என்பது இந்தோனேசிய மக்களுக்குக் கடவுள் வழங்கிய அற்புதமானதொரு கொடை. இது கடவுளின் முடிவற்ற அன்பின் அடையாளம். இவற்றை குழந்தைகளின் தாழ்ச்சிநிறை கண்கள் கொண்டு பார்ப்பது நம் கடவுளை நம்புவதற்கும், நம்மை எளியவர்களாகவும் அன்புக்குரியவர்களாகவும் அடையாளம் காண்பதற்கும் (காண்க திபா 8), நன்றியுணர்வு மற்றும் பொறுப்புணர்வுகளை வளர்ப்பதற்கும் உதவுகிறது.

**உடன்பிறந்த உறவு**

உடன்பிறந்த உறவுடன் வாழ்வது என்றால், ஒருவரையொருவர் வரவேற்பது, ஒருவரையொருவர் வேற்றுமையில் சமமாக அங்கீகரிப்பது என்பது பொருள். இதுவும் இந்தோனேசிய தலத்திருஅவைக்கு மிகவும் பிரியமான ஒரு மதிப்பு மற்றும் கலாசார, இன, சமூக மற்றும் மத நிலையில் எதிர்கொள்ளும் பல்வேறு உள் மற்றும் வெளிப்புற உண்மைகளை நீங்கள் வெளிப்படுத்தும் வெளிப்படைத்தன்மையின் வழியாக வெளிப்படுத்தப்படுகிறது. குறிப்பாக, உங்கள் தலத்திருஅவை அனைவரின் பங்களிப்பையும் மதிக்கிறது மற்றும் ஒவ்வொரு அமைப்பிலும் தாராளமாக உதவி வழங்குகிறது இது முக்கியமானது, ஏனென்றால் நற்செய்தியை அறிவிப்பது என்பது, நமது நம்பிக்கையைத் திணிப்பதோ அல்லது மற்றவர்களின் நம்பிக்கைக்கு எதிராகச் செயற்படுவதோ அல்ல, மாறாக, கிறிஸ்துவைச் சந்திக்கும் மகிழ்ச்சியை (காண். 1 பேதுரு 3:15-17) எப்போதும் மிகுந்த மரியாதையுடன் பகிர்ந்துகொள்வதை அர்த்தப்படுத்துகிறது.

## கனடா தமிழ் ஆன்மீக.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்குப் பகுதியில் வாழ்ந்து வரும் கத்தோலிக்க இறைமக்களின் ஆன்மீக வாழ்வை மேன்மைப்படுத்தும் நோக்கமாகக் கொண்டு இயங்கி வரும் புனித பற்றிமா அன்னை தமிழ் ஆன்மீகப் பணியகம் தமிழ் வழி இறை வளர்ப்போம் என்ற நேக்கத்தோடு பணியகத்தின் வளர்ச்சிக்காகவும், நிதி சேகரிப்புக்காகவும் மேடையேற்றப்பட்டுள்ள இந் நாட்டுக்கூத்து முயற்சியானது புனித பற்றிமா அன்னையின் பரிந்துரையால் சிறப்பான ஒன்றாக நடைபெற்று முடிந்துள்ளது.

பேராயர் அவர்கள் தமது உரையில், தாம் புதிய கலாசாரத்தைக் கொண்டாடுவதற்காக வந்திருக்கிறேன் என்றும், தமிழ் மொழியின், அதன் வரலாறு, அதன் விழுமியங்களைக் கற்றுக்கொள்ள நான் இங்கு வந்திருக்கிறேன் என்றும் குறிப்பிட்டிருந்தார். கலாச்சாரம் மிகவும் அவசியம் ஏனெனில் அது நமது அடையாளத்தை வெளிப்படுத்துகிறது. கலாசாரம் மிகவும் அவசியம் ஏனெனில் அது எமது ஒன்றிணைந்த செயற்பாட்டை, ஒற்றுமையை, நாம் எங்கிருந்து வருகிறோம், எமது சிறப்பான மரபுகள் எவை என்பனவற்றை வெளிக்கொணருகின்றது.

எமது விசுவாசமும் எமக்கு மிகவும் அவசியம். நாம் கொண்டுள்ள விசுவாசம் எமக்கு நாம் யார் என்பதை வெளிப்படுத்துகிறது. அவ் விசுவாசம் நாம் ஒன்றிணைந்த இறைவனின் பிள்ளைகள் என்பதை எடுத்துக்காட்டுகிறது. புனித யோசவ்வாஸ் ஒரு விசுவாசத்தின் மனிதர். எல்லாவற்றையும் விட்டுவிட்டு விசுவாசம் என்னும் விதை அழிந்து போய்விடாது அதை விருட்சமாக்கிட இலங்கையின் மறை போதகரானார். பல துன்பங்களைக் கடந்து விசுவாசத்தோடு மற்றவர்களுக்கு விசுவாசத்தைக் கொடுப்பதற்காக அவர் தம்மை அர்ப்பணித்தார். அவ்வாறு உங்கள் நாட்டை விட்டு இங்கு வந்தாலும் கலாசாரத்தையும், விசுவாசத்தையும் பற்றிக் கொண்டவர்களாக நீங்கள் வாழ்ந்து அடுத்த தலைமுறையினருக்குக் கொடுப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். தமிழ்க் கத்தோலிக்க சமூகமாக நீங்கள் றொரன்றோ உயர்மறைமாவட்டத்துக்குச் செய்த, செய்து வருகிற அனைத்து ஒத்துழைப்புகளுக்கும் நன்றிகள் கூறி எம்மை உற்சாகப்படுத்தி தொடர்ந்தும் இறை விசுவாசத்தில் உறுதியோடு வாழ்ந்திட ஆசீர் கூறி நின்றார்.

## 45வது வெளிநாட்டு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வரவேற்பு நிகழ்ச்சி அரசுத்தலைவர் மாளிகைக்கு முன்வளாகத்தில் செப்டம்பர் 4ஆம் திகதி காலையில் முதல் நிகழ்ச்சியாக இடம்பெறும் என ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்ததால், விமான நிலையத்திலிருந்து உடனேயே திருப்பீடத் தூதரகத்திற்குச் சென்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

13 மணி நேரம் பயணம் செய்து ஜகார்த்தா வந்திறங்கிய திருத்தந்தைக்கு ஓய்வு கொடுக்கும் வண்ணம் செப்டம்பர் 3ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலையில் எவ்வித பொது நிகழ்ச்சித் திட்டங்களும் திட்டமிடப்படவில்லை. தன் 45வது திருப்பயணத்தின் முதல் நாளான செப்டம்பர் 3ஆம் திகதியன்று, விமான நிலையத்திலிருந்து 27 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள இந்தோனேசியாவிற்கான திருப்பீடத்தூதரகத்திற்கு ஊர்தியில் பயணம் மேற்கொண்டார்.

தலைநகர் ஜகார்த்தாவின் மையத்தில் இருக்கும் இந்தத் திருப்பீடத்தூதரகம் 1966ஆம் ஆண்டு அப்போதைய அரசுத்தலைவர் சுகார்னோ அவர்களின் முன்னிலையில் திறந்துவைக்கப்பட்டது. திருப்பீடத் தூதரகத்தை அரைமணி நேரப் பயணத் திற்குப்பின் வந்தடைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அங்கேயே மதிய உணவருந்தி சிறிது ஓய்வும் எடுத்துக் கொண்டார்.

இந்நாள் பிற்பகலில் தனியாகத் திருப்பலி நிறைவேற்றுவது தவிர, எவ்வித நிகழ்ச்சிகளோ, சந்திப்புக்களோ பயணத்திட்டத்தில் இல்லை.

## இறை அடியார் பி.ஏ. தோமஸ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இத்திருநாள் திருப்பலியை யாழ்ப்பாணம் மறை மாவட்டக் குரு முதல்வர் அருட்பணி பி. ஜே. ஜெபரட்ணம் அடிகளார் தலைமை தாங்கி ஒப்புக் கொடுத்தார்.

குரு முதல்வர் அவர்கள் தனது மறையுரையின் பொழுது தோமஸ் அடிகளாருடைய புனிதர் பட்டத்திற்காக செபிக் கும்படியாகக் கேட்டுக்கொண்டதுடன் வல்லமை நிறைந்த செபமாலைப் பக்தியைப் பரப்பியது ஒன்றே அவர் புனிதராவதற்குப் போதுமானது என்றும் தெரிவித்தார். நற்கருணை வழிபாட்டைத் திருவுளப் பணியாளர் சபையைச் சேர்ந்த அருட்தந்தை டெவின் அடிகளார் நெறிப்படுத்தினார்.

செபமாலைத் தாசர் சபையைச் சேர்ந்த அருட்தந்தையர்கள் செபஸ்டியன் வீனஸ் லியோனிஸ் கமல் ஆகியோர் இத்திருவிழாவைச் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்கள்.

கனடாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து நூற்றுக் கணக்கான பக்தர்கள் இத்திருவிழாவில் பங்கு பற்றி இறை ஆசீர் பெற்றுக் கொண்டார்கள்.


3ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 06 . 11 . 1945

விண்ணில் 13 . 09 . 2021



அமரர்

சின்னப்புநாயகம் லோறன்ஸ் சவுந்தரநாயகம்

“வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்களாய் இருக்கின்றோம்” (உரோ14:08)

அன்புடனும் பண்புடனும் கனிவுடனும், ஆக்கமும் ஊக்கமும் தந்து, அவனியிலே நாம் சீரும் சிறப்புடனும் வாழ, எமக்கு வழிகாட்டி எமக்காக வாழ்ந்த அப்பா! நீங்கள் மண்விட்டு விண் சென்று மூன்று வருடங்கள் சென்றாலும் எம் மனதில் என்றும் வாழ்கின்றீர்கள் உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

118,4ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம்

நினைவுகளுடன் குடும்பத்தினர்

AD/48

## பளை மத்திய கல்லூரியில் உளவிழிப்புணர்வுக் கருத்தமர்வு



லம்போதரா உளவிழிப்புணர்வுச் செயற்பாட்டு நிலையத்தின் ஏற்பாட்டில் பளை மத்திய கல்லூரியின் தரம் 11 மாணவர்களை இணைத்து முன்னெடுக் கப்பட்ட உள விழிப்புணர்வுக் கருத்தமர்வு 30, 31 ஆம் திகதிகளில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் திரு. குமாரசாமி ரவீந்திரா அவர்களின் ஒழுங்கு படுத்தலில் லம்போதரா உள விழிப்புணர்வுச் செயற் பாட்டு நிலைய ஸ்தாபகரும் திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளருமான திரு. தினகரன் ரவி அவர் களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அகில இலங்கை தொழில் வழிகாட்டல் ஆலோசகர் திரு. விஸ்வஜிந்தன், திரு. சிவதனேஸ், அருட்சகோ தர சிறிய புஸ்பம், திரு. தினகரன் ரவி ஆகி யோர் வளவாளர்களாகக் கலந்து மாணவர்களை வழிப் படுத்தினர்.

உள அமைதி மேம்பாட்டில் சுய கற்றலை விருத்தி செய்து தொலைநோக்கு உருவாக்கலை நோக்காகக் கொண்டுமுன்னெடுக்கப்பட்ட இந்நிகழ்விற்கான அனு சரணையை பாடசாலையுடன் இணைந்து கல்லூரி யின் பழைய மாணவர்களான திரு வினாசித்தம்பி குடும்பத்தினர் வழங்கியிருந்தனர். இந்நிகழ்வில் 80 வரையான மாணவர்கள் பங்குபற்றிப் பயனடைந்த னர்.

## கப்பலேந்தி மாதா ஆலயத்தில் மறையாசிரியர் மாணவர்களுக்கான கருத்தமர்வுகள்,



கடந்த 25ஆம் திகதி கட்டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலயத்தில் மறையாசிரியர் மாணவர்களுக் கான கருத்தமர்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் விளையாட்டுக்கள், வினாவிடைப் போட்டி, தீப் பாசறை, என்பன இடம்பெற்றன. வெற்றிலைக் கேணி புனித அந்தோனியார் ஆலயம் மற்றும் இயக்கச்சி புனித செபஸ்தியார் ஆலய மறைக்கல்வி மாணவர் களையும் இணைத்து இந்நிகழ்வு முன்னெடுக்கப் பட்டது. இந்நிகழ்வுகளின் இறுதிநாள் காலை யாழ். மறைக்கல்வி நிலைய இயக்குநர் அருட்தந்தை டியூக் வின்சன்ட் அவர்கள் தலைமையில் சிறப்புத் திருப்பலி யும் தொடர்ந்து மறைக்கல்வி வாரத்தில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரி சில்களும் வழங்கிவைக்கப்பட்டன. இந்நிகழ்வுகளில் 180 வரையான மாணவர்களும் 16மறையாசிரியர் களும் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

## புனித சவேரியார் ஆலய வருடாந்தத் திருவிழா



தர்மபுரம் புனித சவேரியார் ஆலய வருடாந்தத் திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை நிக்ஸன் கொலின் அவர்களின் தலைமையில் 31ஆம் திகதி நடைபெற்றது. 22ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி நடைபெற்று வந்த நிலையில் 30ஆம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது. திருவிழாத் திருப்பலியை யாழ். கொழும்புத்துறை புனித பிரான்சிஸ்கு சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி உருவாக்குனர் அருட்தந்தை ரவி ராஜ் அவர்களும் நற்கருணை விழாத் திருப்பலியை கிளிநொச்சி மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை பெனற் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத் தனர். திருவிழாத் திருப்பலி நிறைவில் புனிதரின் திருச் சுருபப் பவனியும் ஆசீர்வாதமும் நடைபெற்றது.

## புனித மடுத்தீனார் சிறிய குருமட மாணவன் சாதனை



வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டி கடந்த 20 ஆம்திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது. ஐந்து மாவட்டங்களிலுமுள்ள 13 வலயங் களையும் சேர்ந்த பாடசாலை களுக்கிடை யிலானோர் இப்போட்டிகளில் கலந்துகொண்ட னர். இப்போட்டிகளில் பங்குபற்றிய யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மாணவனும் புனித மடுத்தீனார் சிறிய குருமட மாணவனுமான செல்வன் நிலக்சன் 20வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தையும் 400 மீற்றர்தடைதாண்டல் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுள்ளார்.

## பாசையூர்ப் பங்கில் முதல்நன்மை பெறவுள்ள மாணவர்களுக்கான பாசறை



பாசையூர்ப் பங்கில் முதல் நன்மை பெறவுள்ள மாணவர்களுக்கான பாசறை நிகழ்வு கடந்த 29ஆம் திகதி வியாழக் கிழமை நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை ஜேம்ஸ் அவர்களின் ஒழுங்கு படுத்தலில் இடம் பெற்ற இந்நிகழ்வில் திருமதி. டினோ மற்றும் திரு. நெல்சன் ஆகியோர் வள வாளர்களாகக் கலந்து கருத்துரைகள், குழுச்செயற்பாடுகள், விளையாட்டுக்கள் ஊடாக மாணவர்களை நெறிப்படுத்தியி ருந்தார்கள்.

இந்நிகழ்வில் 35 வரையான மாண வர்கள் பங்குபற்றி ப் பயனடைந்தனர்.

## புங்குடுதீவுப் பங்கில் முன்னெடுக்கப்பட்ட பீடப்பணியாளர் தின நிகழ்வு



புங்குடுதீவுப் பங்கில் முன்னெடுக்கப்பட்டு வந்த பீடப்பணியாளர் மாதத்தின் நிறைவுநாள் நிகழ்வுகள் கடந்த 25ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தைலியான்ஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வுகளில் அன்றை தினம் காலை சிறப்புத்திருப்பலியும் தொடர்ந்து பீடப்பணியாளர்க ளுக்கிடையிலான கரப்பந்தாட்டம் மற்றும் உதைப்பந்தாட்டப் போட்டிகளும் இடம்பெற்றன.

தொடர்ந்து அன்றைய தினம் மாலை பீடப்பணியாளர்களுக்கான விளையாட்டுக்களும் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் தீவக மறைக்கோட்ட பீடப்பணியாளர் இணைப்பாளர் அருட்தந்தை அஜந்தன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் அருட்சகோதரன் றனுஜன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் பக்திச்சபைத் தலைவர்கள் கௌரவ விருந்தினர்களாவும் கலந்து சிறப்பித்தனர்.

## ஆலோசனை உளவியலில் முதுமாணிப் பட்டம் அருட்பணி நிர்மல் சுரஞ்சன்

சல்வற்றோறியன் சபை அருட்தந்தை நிர்மல் சுரஞ்சன் அவர்கள் மருத்துவ மற்றும் ஆலோசனை உளவியல் கற்கைநெறியைக் கொழும்பு INOVATUS கம்பசில் நிறைவுசெய்து முதுகலைமாணிப் பட்டம் பெற்றுள்ளார்.

இவருக்கான பட்டமளிப்பு கடந்த 24 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வ தேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.




## மறைக்கல்வி மாணவர்கள் மற்றும் மறையாசிரியர்களுக்கான கருத்தமர்வு



கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களமும் யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நிலையமும் இணைந்து முன்னெடுத்த மறைக்கல்வி மாணவர்கள் மற்றும் மறையாசிரியர்களுக்கான கருத்தமர்வு கடந்த 31 ஆம் திகதி புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெற்றது.

புதுக்குடியிருப்புப் பங்குத்தந்தை அருட்தந்தை அன்ரனிப்பிள்ளை அவர்களின் ஒழுங்குபடுத்தலில் மறைக்கல்வி நிலைய இயக்குநர் அருட்தந்தை டியூக் வின்சன்ட் அவர்களின் வழிநடத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் கருத்துரைகள், குழுச்செயற்பாடுகள், விளையாட்டுக்கள் என்பன இடம்பெற்றன. இந்நிகழ் வில் 150 வரையான மாணவர்களும் 15 வரையான ஆசிரியர்களும் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

## காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கவனயீர்ப்புப் போராட்டம்




சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாண ங்களின் பல இடங்களிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களால் கவன யீர்ப்புப் போராட்டங்களும் பேரணிகளும் முன்னெடுக்கப்பட்டன.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச விசார ணையை வலியுறுத்தி 30 ஆம் திகதி நடைபெற்ற இப்போராட்டங் கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்றன.

கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்ட பேரணி கிளிநொச்சி கந்த சுவாமி ஆலயத்தில் ஆரம்பமாகி கிளிநொச்சி டிப்போச்சந்தியை சென்ற டைந்த பின் பிரகடணம் வாசிக்கப்பட்டது.இப்பேரணியில் கிளிநொச்சி பங்குத்தந்தைஅருட்தந்தை சில்வெஸ்ரர்தாஸ், வேலன் சுவாமி குருக் கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், பொதுமக்களெனப் பலரும் பங்குபற்றியிருந்தனர்.

## உடன்பிறந்த உறவு என்பது சமத்துவத்தை ஏற்படுத்துகிறது!

இந்தோனேசியாவில் – திருத்தந்தை



உடன்பிறந்த உறவுடன் வாழ்வது என்றால், ஒருவரையொருவர் வரவேற்பது, ஒருவரையொருவர் வேற்றுமையில் சமமாக அங்கீ கரிப்பது என்பது பொருள் எனத் திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிட்டார். இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தாவிலுள்ள தூய மரி யன்னை பேராலயத்தில் ஆயர்கள், அருள்பணியாளர்கள், திருத் தொண்டர்கள், துறவியர், அருட்பணித்துவ மாணவர்கள் மற்றும் பொதுநிலை மறைக்கல்வி ஆசிரியர்களுக்குத் திருத்தந்தை பிரான் சிஸ் அவர்கள் வழங்கிய அருளுரையில் குறிப்பிட்டார் அவர் மேலும் குறிப்பிடுகையில். நம்பிக்கை, உடன்பிறந்த உறவு, பரிவிரக்கம் ஆகிய மூன்றும் எனது இந்தத் திருத்தூதுப் பயணத்திற்காகத் தேர்ந்து கொள்ளப்பட்ட விருதுவாக்கு என்பதை நீங்கள் அறிவீர்கள்.

ப. 7

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2024ம் ஆண்டு புரட்டாதி மாதம் 08ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
பரிவிரக்கம்